




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 238 10.04.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 238 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(10-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-27
பிறை: தேய்பிறை
திதி
அஷ்டமி இரவு 8.59 வரை
பிறகு நவமி.
நட்சத்திரம்:
பூராடம் காலை 9.27 வரை
பிறகு உத்திராடம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00-4.30 மணி
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | நன்மை |
| மிதுனம் | உறுதி |
| கடகம் | ஆக்கம் |
| சிம்மம் | அன்பு |
| கன்னி | சாந்தம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நட்பு |
| தனுசு | உயர்வு |
| மகரம் | வரவு |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | புகழ் |

## பாகிஸ்தானின் சமாதான பேச்சு தோல்வி

# மீண்டும் அதிகரிக்கும் பதற்றம்

## ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது; இஸ்ரேல் காரணமா..?


**டெஹ்ரான், ஏப்.10:**

திறக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மீண்டும் மூடியிருப்பது பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி மாதம் 28 ம் தேதி போரை தொடங்கியது. இந்த போர் ஒரு மாதத்தை கடந்தும் நடந்து வருகிறது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியதோடு, ஹார்முஸ் ஜலசந்தியை மூடியது. இதனால் சவுதி அரேபியா, கத்தார், ஓமன், ஐக்கிய அரபு அமீரகம், ஈராக் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்பட பல ஆசிய நாடுகளுக்கான கச்சா எண்ணெய், சமையல் எரிவாயு விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும். இல்லாவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மிரட்டல் விடுத்தார். அதோடு ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவுக்கு வந்தது. காலக்கெடு முடிவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு டிரம்ப், ''ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும். இல்லாவிட்டால் ஈரானின் நாகரீகம் அழிக்கப்படும். அதில் இருந்து அவர்களால் மீண்டு வர முடியாது'' என்று மிரட்டல் விடுத்திருந்தார். இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்டு ஈரான் - அமெரிக்காவிடம் பேச்சுவார்த்தை நடத்தியது.

இதையடுத்து போர் 2 வாரம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக டிரம்ப் அறிவித்தார். அமெரிக்கா, இஸ்ரேல் சார்பில் ஈரான் மீது



தாக்குதல் நடத்தப்படாது என கூறப்பட்டது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மீண்டும் திறந்தது. கப்பல்கள் வழக்கம்போல் பயணிக்க தொடங்கின. இதனால் கச்சா எண்ணெய், கேஸ் தட்டுப்பாட்டு பிரச்சனைக்கு தீர்வு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை மூடி உள்ளதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது. போர் நிறுத்தம் தொடர்பான ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறி உள்ளது என்றும், இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல கச்சா எண்ணெய் கப்பல்களுக்கு அனுமதியில்லை என்றும், அனைத்து கப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஈரானின் அரசு செய்தி நிறுவனமான ஐ.ஆர்.ஐ.பி. வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சில நிமிடங்களுக்கு முன் ஈரானின் பார்ஸ் மாகாணத்தின் லார் நகரின் வான்வெளி பரப்பில் இஸ்ரேலின் ஹெர்ம்ஸ் 900 ரக டிரோன் பறந்தது. இந்த டிரோன் ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படையின் நவீன வான்வெளிப் பாதுகாப்பு அமைப்பால் இடைமறித்து அழிக்கப்பட்டது. ராணுவ நடவடிக்கைக்கு அப்பாற்பட்டு அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகளின் விமானமும், ட்ரோன்களும் ஈரான் வான்வெளிக்குள் நுழைவது என்பது போர் நிறுத்த மீறலாக கருதப்படும். இதற்கு உறுதியான முறையில் பதிலடி கொடுக்கப்படும். தற்போது இஸ்ரேலின் போர் நிறுத்த விதிமீறல் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த செல்லும் கச்சா எண்ணெய் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளது.

இதனிடையே லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் இலக்கு மறைவிடங்கள் மீது 100 வான்வழித் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூழலில் லெபனான் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்று இஸ்ரேல்தெரிவித்தது.இஸ்ரேலின் இந்த நிலைப்பாட்டை ஈரான் மறுத்ததுடன், ஹிஸ்புல்லா மற்றும் ஈரான் ஆதரவு பெறும் பிற போராளிக் குழுக்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்களையும் உள்ளடக்கிய அனைத்து ராணுவ நடவடிக்கைகளையும் முழுமையாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. இதனால் அங்கு மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

## நாகர்கோவிலில் ஏப். 15-ல் பிரதமர் மோடி ரோடு ஷோ



**புதுடெல்லி, ஏப்.10:**

தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நாகர்கோவிலில் வரும் 15-ம் தேதி பிரதமர் மோடி, ரோடு ஷோ நடத்துகிறார்.

சட்டப்பேரவை தேர்தலையொட்டி பிரதமர் நரேந்திர மோடி வரும் 15-ம் தேதி குமரி மாவட்டம் வருகை தந்து, வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று பேசுவதாக திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இதற்காக, நாகர்கோவில் அருகே ஈத்தங்காட்டில் உள்ள மைதானம் ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வரும் 15-ம் தேதி நாகர்கோவிலில் 'ரோடு ஷோ' நடத்த இருக்கிறார். இதை நேற்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் உறுதி செய்தார். நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பிலிருந்து, வடசேரி எம்.ஜி.ஆர். சிலை வரை இந்த ரோடு ஷோ நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இதையடுத்து, ரோடு ஷோ நடைபெறும் வடசேரி - வேப்பமூடு வரையிலான சாலையை மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் தலைமையில் போலீஸார் நேற்று ஆய்வு செய்தனர்.

# மாலை 5 மணி நிலவரம்: புதுச்சேரியில் 86.92%, கேரளாவில் 75.01%, அசாமில் 84.42% வாக்குகள் பதிவு

**புதுடெல்லி, ஏப்.10:**

மாலை 5 மணி நிலவரப்படி கேரளாவில் 75.01% வாக்குகளும், அசாமில் 84.42% வாக்குகளும், புதுச்சேரியில் 86.92% வாக்குகளும் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் நேற்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது. நீண்ட வரிசையில் நின்று பொதுமக்கள் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றி வருகின்றனர். மாலை 6 மணி வரை தேர்தல் நடைபெற உள்ளது. ஆறு மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வந்தவர்கள் அனைவரும் வாக்களிக்கும் வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

புதுச்சேரியில் 86.92% வாக்குகள் பதிவு: 30 சட்டப்பேரவைத்தொகுதிகளைக் கொண்ட புதுச்சேரியில் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இங்கு காலை 11 மணி நிலவரப்படி 37% வாக்குகளும், பகல் 1 மணி நிலவரப்படி 56.83% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 72.40% வாக்குகளும் பதிவாகின. மாலை 5 மணி நிலவரப்படி 86.92% வாக்குகள் பதிவாகின.

இங்கு என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் இந்த தேர்தலில் முக்கிய சக்திகளாகக் கருதப்படுகின்றன.

கேரளாவில் 75.01% வாக்குகள்: 140 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட கேரளாவில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. 2.71 கோடி வாக்காளர்களைக் கொண்ட கேரளாவில் 883 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். காலை 11 மணி நிலவரப்படி கேரளாவில் 33.30% வாக்குகளும், பகல் 1 மணி நிலவரப்படி 49.70% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 62.71% வாக்குகளும் பதிவாகின. மாலை 5 மணி நிலவரப்படி 75.01% வாக்குகள் பதிவாகி உள்ளன.

இங்கு ஆளும் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணிக்கும், பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதேநேரத்தில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்த தேர்தலில் முக்கிய சக்தியாக களத்தில் உள்ளது.

அசாமில் 84.42% வாக்குகள் பதிவு: 126 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட அசாமில் காலை 7 மணி முதல் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றி வருகின்றனர். காலை 11 மணி நிலவரப்படி இந்த மாநிலத்தில் 38.92% வாக்குகள் பதிவாகின.

பகல் 1 மணி நிலவரப்படி 59.63% வாக்குகளும், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 75.91% வாக்குகளும் பதிவாகின. மாலை 5 மணி நிலவரப்படி 84.42% வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த மாநிலத்தில், ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

வெப்ப அலை தாக்கம் காரணமாக, வாக்குச்சாவடிகளில் நிழற்குடைகள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்கச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இன்று பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மற்ற மாநிலங்களுடன் சேர்த்து மே மாதம் 4-ம் தேதி வெளியாகவுள்ளன.

## புதுச்சேரி தேர்தல்: ஆளுநர், தலைவர்கள் வாக்களித்த பின் கூறியது என்ன?



புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலையொட்டி துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முன்னாள் முதல்வர் நாராயணசாமி உள்ளிட்ட தலைவர்கள் வாக்களித்தனர்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது. இதையொட்டி ராஜ்பவன் தொகுதிக்குட்பட்ட சுகாதாரத் துறை இயக்குநகரத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் தனது குடும்பத்தினருடன் சென்று வாக்கு செலுத்தினார்.

அப்போது அவர் கூறும்போது, "புதுச்சேரியில் உள்ள அனைத்து குடிமக்களும் தங்களது வாக்குரிமையை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

மணவெளி சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் பாஜக வேட்பாளரான சட்டப்பேரவை தலைவர் செல்வம் தவளக்குப்பத்தில் உள்ள ஆச்சாரியா பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

முன்னாள் முதல்வர் நாராயணசாமி மிஷன் வீதியில் உள்ள வ.உ.சி பள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார். அப்போது நாராயணசாமி கூறுகையில், "புதுச்சேரியில் திமுக, காங்கிரஸ் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் எழுச்சி உள்ளது. ஸ்டாலின், ராகுல் புதுச்சேரிக்கு வந்து பிரச்சாரம் செய்து வாக்குறுதி அளித்ததின் எதிரொலியாக மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் புதுச்சேரியில் காங்கிரஸ், திமுக கூட்டணி ஆட்சி அமைக்கும்" என கூறினார்.

மண்ணாடிப்பட்டு தொகுதி வேட்பாளரான உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், தனது மனைவியுடன் வந்து திருக்கனூரில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடியில் வாக்களித்தார். பின்னர் அவர் எங்களுக்குரிய வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. நான் முதல்வராவது குறித்து பிரதமர், உள்துறை அமைச்சர், கட்சி தலைவர், தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர் முதல்வர் ரங்கசாமி சேர்ந்து உரிய நேரத்தில் உரிய முடிவை எடுப்பார்கள் என தெரிவித்தார்.

டூவீலரில் வந்து வாக்களித்த முதல்வர் ரங்கசாமி: வாக்களித்த முதல்வர் ரங்கசாமியிடம் செய்தியாளர்களிடம் பேசுகையில், "வாக்களித்தது மகிழ்ச்சியளிக்கிறது. தேர்தலுக்கு முதல் நாள் சேலம் அப்பா பைத்தியம் சுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவது வழக்கம். அதேபோல் இம்முறையும் சாமி கும்பிட்டு வந்துதான் வாக்களித்துள்ளேன். தேசிய ஜனநாயக கூட்டணி அதிக இடங்களில் வெல்லும். மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது." என்றார். லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் தனது மனைவியுடன் ரெட்டியார்பாளையம் புகுதியில் உள்ள இமாகுலேட் பள்ளி வாக்குச்சாவடியில் வாக்களித்தார். இதேபோல் அமைச்சர்கள் உள்ளிட்ட தலைவர்கள் வாக்குகளை செலுத்தினர்.

## தமிழக மீனவர்கள் 10 பேரை சிறைபிடித்து இலங்கை கடற்படை அட்டூழியம்



**ராமேசுவரம், ஏப்.10:**

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள், உரிய அனுமதிச் சீட்டு பெற்று பாம்பன் துறைமுகத்தில் இருந்து விசைப்படகில் புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

மீனவர்கள் தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் விசைப்படகை சுற்றி வளைத்து அதில் இருந்த தமிழக மீனவர்கள் 10 பேரையும் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாகக் கூறி கைது செய்தனர். விசைப்படகையும் பறிமுதல் செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டும் வரும் இலங்கை கடற்படை அதிகாரிகள், விசாரணைக்குப் பிறகு தமிழக மீனவர்கள் பத்து பேரையும், இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

விசாரணைக்குப் பிறகே கைது செய்யப்பட்ட மீனவர்கள் யார் என்பது குறித்த தகவல்கள் தெரியவரும்.

எல்லை தாண்டி மீன்பிடிப்பதாகக் கூறி, தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர்கதையாகி வருகிறது. அதுமட்டுமின்றி தமிழக மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது, கைது செய்யப்படும் மீனவர்களுக்கு அபராதம் விதிப்பது தவிர மீனவர்கள் மீதான தாக்குதல், துப்பாக்கிச் சூடு, இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டூழியங்களும் தமிழக மீனவர்களுக்கு பெருந்துயராக இருந்து வருகிறது.

இலங்கைகடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.




# பங்குனி உற்சவம்



திருவெள்ளறை ஸ்ரீபுண்டரீகாக்ஷ பெருமாள் சன்னதி பங்குனி உற்சவம் ஐந்தாம் நாள் நந்தவன ஆஸ்தானம் மண்டபம்.

## 20 தொகுதி வேட்புமனுக்கள் நிராகரிப்பு: தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் வேல்முருகன் புகார்



**சென்னை, ஏப்.10:**

திருப்போரூர், சிதம்பரம், ஓசூர், ராமநாதபுரம், மதுரவாயல், குன்னூர், குளித்தலை, பழனி,பொள்ளாச்சி, தாராபுரம், மதுரை மத்திய தொகுதி, கள்ளக்குறிச்சி, பெரியகுளம் உள்ளிட்ட 20 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

20 தேர்தல் நடத்தும் அலுவலர்களும் சட்டத்துக்கு புறம்பாக வேட்புமனுக்களை நிராகரித்துள்ளனர். எனவே கூடுதல் தலைமைச் செயலர் மூலமாக விசாரணை நடத்தி, எங்கள் வேட்பாளர்களின் மனுக்களை வாங்கி, ஏப்.9-ம் தேதி வெளியாகும் வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தேமுதிகவிலிருந்து விலகிய மீசை ராஜேந்திரன் அதிமுகவில் இணைந்தார்



**சென்னை, ஏப்.10:**

சட்டமன்றத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தேமுதிகவின் செய்தித் தொடர்பாளரும், மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் தீவிர விசுவாசியுமான நடிகர் மீசை ராஜேந்திரன் அக்கட்சியிலிருந்து விலகி, அதிமுகவில் இணைந்தார்.

தமிழ் திரையுலகில் வில்லன் மற்றும் குணச்சித்திர நடிகராக அறியப்படுபவர் மீசை ராஜேந்திரன். இவருக்குத் திரையுலகில் களம் அமைத்துக் கொடுத்தவர் மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த். அதன் காரணமாக, கடந்த 31 ஆண்டுகளாக விஜயகாந்தின் தீவிர விசுவாசியாக அவரது மன்றத்திலும், கட்சி தொடங்கப்பட்ட பின் கடந்த 21 ஆண்டுகளாக தேமுதிகவிலும் பயணித்து வந்தார்.

மேலும் அவருக்கு செய்தித் தொடர்பாளர் பதவியும் வழங்கப்பட்டிருந்தது. விஜயகாந்த் உயிருடன் இருந்தவரை கட்சிக்குள் முக்கியத்துவம் பெற்று வந்த ராஜேந்திரன், முன்னதாக நடந்த தேர்தல்களில் போட்டியிடவும் வாய்ப்பு பெற்றார். இருப்பினும், விஜயகாந்த் மறைவிற்குப் பிறகு கட்சியில் தனக்கான முக்கியத்துவம் படிப்படியாகக் குறைக்கப்பட்டதாக அவர் உணர்ந்தார்.

நடப்பு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட அவர் சீட் எதிர்பார்த்த நிலையில், தலைமை அவருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த ராஜேந்திரன், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்திற்குத் தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இது குறித்து மீசை ராஜேந்திரன், "விஜயகாந்த் மீது கொண்ட பற்றால் பல ஆண்டுகாலமாக எனது உழைப்பை நல்கினேன். ஆனால், தற்போது விசுவாசத்திற்குத் தகுந்த மதிப்பும் அங்கீகாரமும் அளிக்கப்படுவதில்லை.

மிகுந்த மனவருத்தத்துடன் தேமுதிகவில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளேன்," எனத் தெரிவித்துள்ளார். இதையடுத்து, நேற்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் மீசை ராஜேந்திரன் இணைந்தார்.

## விருதுநகரில் விஜயபிரபாகரனின் வெற்றி உறுதி செய்யப்படும்: மாணிக்கம் தாகூர்



இதுகுறித்து மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

திருநகரில் உள்ள நமது அலுவலகத்தில், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இந்த மண்ணின் விருதுநகர் சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் மக்களுக்காகவே வாழ்ந்த 'கேப்டன்' விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் சந்தித்தார்.

அவர் வெற்றி பெற,இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்போடு செயல்பட்டு, அவரை மாபெரும் வெற்றி பெறச் செய்ய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டேன்.

நமது அன்புத் தலைவர் ராகுல் காந்தியின் ஆசியோடும், விருதுநகரில் விஜய்பிரபாகர் அவர்களின் வெற்றி உறுதி செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிவகங்கையில் வயலில் இறங்கி நாற்று நடவு செய்து பெண்களிடம் அ.தி.மு.க. வேட்பாளர் செந்தில்நாதன் வாக்கு சேகரிப்பு



**சிவகங்கை, ஏப்.10:**

சிவகங்கை அ.தி.மு.க. வேட்பாளர் செந்தில்நாதன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மதகுபட்டி பகுதியில் கோடை விவசாய பணிகள் நடைபெற்று வருகிறது. விவ சாய வயலில் நடவு பணியில் ஈடுபட்டி ருந்த பெண்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்க சென்றார். வெள்ளை சட்டை, வெள்ளை வேட்டி அணிந்து வயலுக்கு வந்த செந்தில் நாதன், அங்கேயே வேட்டி யை மடக்கிக் கட்டி, பெண்க ளுடன் சேர்ந்து நாற்று நடும் பணியிலும் ஈடுபட்டு வாக்கு சேகரித்தார். தொ டர்ந்து அவர் பேசுகையில், தி.மு.க. ஆட்சியில் அம்மா உணவகம், தாலிக்கு தங்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறுத்தப்பட்டு உள்ளது. மீண்டும்எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான ஆட்சி அமைந்தால் அந்த திட்டங்கள் தொடரும்.

இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கும் மிக மோசமாக உள்ளது. தினசரி கொலை என்கிற செய்தி ஊடகங்களில் வாடிக்கையாகி விட்டது. குடும்பத்திற் கு வருமானம் என்பது முக்கியமாக இருந்தாலும் அமைதியாகவாழவேண்டும் என்பதும் மிக, மிக முக்கியம். சட்டம் ஒழுங்கு சீரடைய அ.தி.மு.க. விற்கு வாக்க ளிக்க வேண்டும்.

அரசின் திட்டங்கள் முழுமையாக கிடைக்க என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் என்றார். தொடர்ந்து அண்ணா நகர், ஒக்கூர், கருங்காப் பட்டி, கொளக்கட்டப்பட்டி, பிரவலூர், பெருங்குடி, மதகுபட்டி உள்ளிட்ட 50 கிராமங்களுக்கு சென்று பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

இதில் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாகரன், அ.ம.மு.க. மாவட்ட மாண வியர் அணி செய லாளர் அபிநயா பாண்டி குமார், மாவட்ட கவுன்சிலர் கோமதி தேவராஜ், கலை பிரிவு மாவட்ட செயலாளர் செந்தில் முருகன், வர்த்தக அணி செயலாளர் ராஜேந்திரன், தகவல் தொழில்நுட்ப பிரிவு மண்டல துணைத் தலைவர் சங்கர் ராமநாதன், அமைப்பு சார அணி செயலாளர் சரவணன் மற்றும் ஒன்றிய மாவட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

# எங்கள் வெற்றியை நான் கர்த்தரிடம் ஒப்படைக்கிறேன் - சீமான்



**கன்னியாகுமரி, ஏப்.09:**

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெற இருக்கிறது. நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தன்னுடைய கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து கன்னியாகுமரியில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

நீங்கள் யாரும் என்னுடைய கட்சியின் சார்பில் போட்டியிடும் எனது சகோதர சகோதரிகளுக்கு ஓட்டு போட வேண்டாம். ஆனால் தேவாலயத்திற்கு ஜெபிக்க செல்லும் போது நாம் தமிழர் கட்சியினர் ரொம்ப நாட்களாக கத்திக்கொண்டே இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் வெல்ல வேண்டும் என ஒரு நிமிடம் கர்த்தரிடம் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இதேபோல பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு செல்லும் எனது சொந்தங்கள் அல்லாஹ்விடம் நீங்கள் யாரும் சீமானுக்கோ அல்லது அவனுடைய பிள்ளைகளுக்கோ ஓட்டு போட போவதில்லை. கருணாநிதிக்கோ அல்லது காங்கிரசுக்கோ தான் வாக்களிப்பீர்கள். ஆனால், பாவம் 15 வருடமாக இந்த சீமான் பேசிக்கொண்டு இருக்கிறான். கடந்த பத்து வருட காலமாக தெரு தெருவாக கத்திக் கொண்டு இருக்கிறான். இந்த பிள்ளை வெற்றி பெற வேண்டும் என ஒரு வினாடி தொழுகை செய்யுங்கள். ஓட்டு எனக்கு போடவேண்டாம். என்னுடைய வெற்றியை கர்த்தர் மற்றும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துக் கொள்கிறேன். ஏற்கனவே முருகனிடம் பேசிவிட்டு தான் வந்துள்ளேன். உன்னுடைய பேரனை வெற்றி பெறச் செய்யாமல் நீ இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்ய போகிறாய் என்று முருகனிடம் கேட்டுள்ளேன் என்றார்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்

# மக்கள் சக்தியுடன், பிரம்மாண்ட வெற்றியை நோக்கி முன்னேறுவோம்!

**நயினார் நாகேந்திரன்**



**தென்காசி, ஏப்.09:**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தவெக என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கடையநல்லூர் வேட்பாளரை ஆதரித்து கடையநல்லூர் தொகுதியில் இன்று தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இது குறித்து நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

இன்றைய தினம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வேட்பாளராக களமிறங்கும் கிருஷ்ணமுரளிக்கு ஆதரவாக, பொதுமக்களை நேரில் சந்தித்து உற்சாகமான வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டோம்.


இன்று கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் கூடிய மக்கள் கூட்டத்தில் இருக்கும் ஒவ்வொருவரின் முகத்திலும் இந்த விடியா திமுக ஆட்சியை எப்போது விரட்டி அடிப்போம் என்ற முடிவு தெளிவாகத் தெரிந்தது, கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி, மக்கள் குடுத்த உற்சாக வரவேற்பும் அவர்களின் பங்களிப்பும் நம் கூட்டணியின் வெற்றியை உறுதிப்படுத்த தயாராக உள்ளது. வளர்ச்சியும் மக்கள் நலனும் நோக்கமாகக் கொண்ட நம் அணிக்கு, கடையநல்லூர் மக்களின் முழு ஆதரவு கிடைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மக்கள் சக்தியுடன், நிச்சயமாக பிரம்மாண்ட வெற்றியை நோக்கி முன்னேறுவோம்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் வெயில் தாக்கம்.. அதிமுக வேட்பாளர் மயங்கி விழுந்ததால் பரபரப்பு.!





**தஞ்சாவூர், ஏப்.10:**

தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அனைத்து கட்சியின் வேட்பாளர்களும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூரில் அதிமுக வேட்பாளர் இளமதி சுப்பிரமணியன் இன்று காலை முதலே பரப்புரையில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடுமையான வெயில் காரணமாக அவர் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த கட்சி நிர்வாகிகள், உடனடியாக அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். தற்போது அவர் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

கடும் வெயிலால் அதிமுக வேட்பாளர் மயங்கி விழுந்த சம்பவம் அப்பகுதியில் சிறிதுநேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கவர்னர், முதல்-அமைச்சர் ரங்கசாமி உள்ளிட்ட தலைவர்கள் வாக்குப்பதிவு



**புதுவை, ஏப்.10:**

சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி நடந்து வருகிறது.

ராஜ்பவன் தொகுதிக்கு உட்பட்ட லோக்நிவாசில் கவர்னர் கைலாஷ்நாதன் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவர் தனது வாக்கைபுதுச்சேரி மாநிலத்துக்கு மாற்றியுள்ளார். புதுவையில் இன்று வாக்குப்பதிவையொட்டி சுகாதாரத்துறை இயக்குனர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்தார்.

கவர்னர் தனது தாயார் லீனா, மனைவி பீனா ஆகியோருடன் வந்து வாக்களித்தார். கவர்னரின் தாயார் லீனா சக்கர நாற்காலியில் வந்து வாக்களித்தார். வாக்களித்த பின் கவர்னர் கைலாஷ்நாதன் கூறும்போது, ஜனநாயகத்தை காக்க அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது நம் அனைவரின் கடமை என கூறினார்.

புதுவை முதல்அமைச்சர் ரங்கசாமி இந்திராநகர் தொகுதிக்கு உட்பட்ட திலாசுப்பேட்டை பிள்ளையார்கோவில் வீதியில் வசித்து வருகிறார். அவர் திலாசுபேட்டையில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்தார். இதற்காக அவர் தனது வீட்டிலிருந்து யமாகா பைக்கில் வந்தார்.


அமைச்சர் நமச்சிவாயம் தனது மனைவியுடன் சென்று, திருக்கனூர் அரசு பள்ளியிலும், மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் நெட்டப்பாக்கம் மடுகரை அரசு நடுநிலைப்பள்ளியிலும், அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் ரெயில்நிலையம் எதிரே உள்ள குபேர் திருமண மண்டபத்திலும், லஜக தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் ரெட்டியார்பாளையம் இமாகுலேட் பள்ளியிலும் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

## நடிகர் மம்மூட்டி தனது மனைவியுடன் வந்து வாக்குகள் பதிவு



நடிகர் மம்மூட்டி தனது ஜனநாயக கடமையை ஆற்றினார். நடிகர் மம்மூட்டியும் அவரது மனைவி சுல்பத் குட்டியும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்வதற்காக கொச்சியில் உள்ள வாக்குச்சாவடிக்கு வருகை தந்து வாக்களித்தனர்....

# கேரளா: திருமணம் முடிந்த கையோடு... ஜனநாயக கடமையாற்றிய புதுமண தம்பதி



**வயநாடு, ஏப்.10:**

கேரளாவில் சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், மாநிலத்தின் பத்தினம்திட்டா மாவட்டத்தில் ஒரு புதுமண தம்பதிகளான திவ்யஸ்ரீ மற்றும் அஷ்வந்த், திருமணம் முடிந்த கையோடு, நேரடியாக வாக்குச்சாவடிக்கு சென்று தங்களது வாக்கை பதிவுசெய்தனர்.

இதுகுறித்து அஷ்வந்த் கூறுகையில்,

வாக்குப்பதிவு தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பே ஜனவரி மாதத்திலேயே எங்களது திருமணத் தேதி முடிவுசெய்யப்பட்டுவிட்டது. எனவே, இரண்டு தேதிகளும் ஒரே நாளில் அமைந்தது ஒரு தற்செயல் நிகழ்வு. நான் மாநிலத்திற்கு வெளியே பணிபுரிந்து வந்ததால் பல தேர்தல்களின் என்னால் வாக்களிக்க முடியவில்லை. ஆனால் இன்று வாக்களித்தது மகிழ்ச்சியளிக்கிறது.

தனது மனைவி எப்போதும் தவறாமல் தனது ஜயநாயக கடைமையை ஆற்றி வருகிறார். அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதே சமூகத்திற்குத் நாங்கள் கூற விரும்பும் செய்தி."

இவ்வாறு அவர் கூறினார்.

# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106







# ! WANTED !

**Muslim Lady Accounts Assistant**

**Qualification:** B.Com / Tally Knowledge Required

**Company:** Perfume Manufacturing Company

**Location:** Chrompet



Contact: 99401 46318


































# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெைவ்பர், வர/மாத சம்ப்ளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

**7540003588**




# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

**8248951872**



# கவிதை அரங்கம்!



நீ சொல்லும்
மிஸ் யூவில்
தொலைகிறேன்
நானும்...!

அலங்கரித்த போதும்
ஒளியிழந்து போனேன்
உன் பார்வை
படாததால்...!

காண்பதற்கு
தடைபோட்ட போதும்
மனதுக்கு தாழ்போட
முடியவில்லை
உள்ளம் உன்னையே
நினைக்குது...!

மழைச்சாரலாய்
நீ அன்பை
பொழிய
வாழவேண்டுமென்ற
ஆசையும்
துளிர்விடுகிறது

# வாழ்க்கை தத்துவம்...




பழி சொல்ல தெரிந்த
யாரும் உனக்கு வழி
சொல்ல போவதில்லை
உன் வாழ்க்கை உன் கையில்

உன் வேதனை பலரை
சிரிக்க வைக்கலாம்
ஆனால் உன் சிரிப்பு
ஒருவரைக்கூட வேதனைப்
படுத்தக் கூடாது

தீயதை விட்டு
தூரத்தில் ஓடு
நல்லதை விடாமல்
துரத்தி ஓடு

மற்றவர் கையில்
எப்போதும் விளையாட்டு
பொம்மை ஆகிடாதே

# "விற்காத பொம்மைகள்"



சாலையோர நடைபாதையில், அழுக்கு வேட்டியுடன் அமர்ந்திருந்தார் பொன்னம்பலம்.

அவருக்கு முன்னால் பிளாஸ்டிக் பொம்மைகள் அடுக்கப்பட்டிருந்தன.

"பொம்மை... பொம்மை!... கலர் பொம்மை... கலர் பொம்மை!" அவ்வழியே போவோர், வருவோர் எல்லோரிடமும் பார்வையால் கெஞ்சினார்.

காரணம், அவர் மகள் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள்.

அறுவை சிகிச்சை செய்ய இன்னும் ஐந்தாயிரம் தேவைப்பட்டது. ஆனால், காலையில் இருந்து வெறும் இருநூறு ரூபாய்க்குத்தான் வியாபாரம் ஆகியிருந்தது.

நேரம் ஆக ஆக, பொன்னம்பலத்தின் நெஞ்சில் பயம் கவ்விக் கொண்டது.

இரவு 10 மணி. தெருவிளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. அக்கம் பக்கத்துக் கடைகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டன. சாலையில் ஆள் நடமாட்டம் குறையத் தொடங்கியது.

"ச்சை... ஒரு பொம்மையாவது வித்துட்டா... இன்னைக்குக் கட்ட வேண்டிய மருந்து காசுக்காவது ஆகுமே..." என்று முணுமுணுத்தபடி வானத்தைப் பார்த்தார்.

மணி 11 ஆகியும் ஒரு பொம்மை கூட விற்கவில்லை.

இயலாமை கண்ணீராய் வழிந்தது. அதைத் துடைக்கக் கூடத் தெம்பில்லாமல், நடுக்கத்துடன் தனது சைக்கிளை மிதித்துக் கொண்டு மருத்துவமனை நோக்கி விரைந்தார்.

வழியெங்கும் மகளின் ஞாபகம். "அப்பா, நான் சீக்கிரம் வீட்டுக்கு வந்திடுவேனல்ல?"என்று அவள் கடைசியாகக் கேட்டது காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

மருத்துவமனை வளாகத்திற்குள் நுழைந்ததும், அவர் அலைபேசி ஒலித்தது. அழைத்தது டாக்டர்.


"ஹலோ... பொன்னம்பலம் சார்..."

"ஆமாம் டாக்டர், இங்கதான் வாசல்ல தான் இருக்கேன்... காசு கொஞ்சம் கம்மியா இருக்கு... காலைல மீதியை..."

எதிர்முனையில் ஒரு நீண்ட அமைதி.

பின் டாக்டர் கரகரப்பான குரலில், "இனி நீங்க காசு கட்ட வேண்டாம் பொன்னம்பலம்.... இனி பொம்மை வித்து நீங்க பணம் சேர்க்க வேண்டிய அவசியமே இல்ல... உங்க மகள்.... உங்க மகள்... இறந்திட்டா."

கையிலிருந்த பொம்மை மூட்டை தரையில் நழுவி விழுந்தது.



(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கேள்வி: ஒரு மனுஷன் ஏன் லூசு மாதிரி ரோட்ல ஓடுறான்?*

*பதில்: ஏன்னா, அவன் "ஓடு" (Tile) வியாபாரி!*

*கேள்வி: சிங்கத்துக்கும் புலிக்கும் கல்யாணம் நடந்தா ஏன் நரிக்கு சந்தோஷம்?*

*பதில்: ஏன்னா, அன்னைக்கு நரிக்கு "கறி" விருந்து இல்ல... ஆனா அந்த கல்யாணத்துல அதுதான் "நாரதர்" வேலை பாத்துச்சு!*
*(மொக்கையா இருந்தாலும் சிரிக்கணும்!)*



# தினம் ஒரு சமையல்



## தக்காளி ரசம்


தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 5 | -நாட்டு தக்காளி |
| சிறியநெல்லிக்காய் அளவு | -புளி |
| 2 ஸ்பூன் | -ஆயில் |
| 1 ஸ்பூன் | -ரசப்பொடி |
| 4 பற்கள் | -பூண்டு |
| உப்பு,மஞ்சள் தூள் | |

தாளிக்க

கடுகு
கருவேப்பிலை
வரமிளகாய்

செய்முறை:



*ரசம் செய்ய சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு கருவேப்பிலை வரமிளகாய் உடைத்து சேர்த்து தாளிக்கவும்.*

*தக்காளி மற்றும் பூண்டை மிக்ஸியில் கொரகொரப்பாக அரைத்து சட்டியில் சேர்த்து கொஞ்ச நேரம் வதக்கவும். இதோடு புளிக்கரைசலையும் ஊற்றி பச்சை வாசனை போக கொதிக்க வைக்கவும்.*

*அதன்பின் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி உப்பு மற்றும் ரசப்பொடியை சேர்த்து சிறு தீயில் நுரை கட்டியவுடன் அடுப்பை அணைக்கவும்.*

# அத்தி பயன்கள்



அத்திப்பழம் (FIGS) நார்சத்து, ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள், கால்சியம், பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் நிறைந்த ஒரு சிறந்த ஊட்டச்சத்து உணவாகும். இது மலச்சிக்கலை நீக்கி, செரிமானத்தை மேம்படுத்துகிறது. இதய ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல், இரத்த சோகையைக் குணப்படுத்துதல், இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் எலும்புகளை வலுப்படுத்துதல் போன்ற பல ஆரோக்கிய நன்மைகளை அத்தி வழங்குகிறது.

அத்திப்பழத்தின் முக்கிய நன்மைகள்:

மலச்சிக்கல் நிவாரணம்: இதில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், குடல் இயக்கத்தை சீராக்கி மலச்சிக்கலை இயற்கையாகக் குணப்படுத்துகிறது.

எலும்பு ஆரோக்கியம்: கால்சியம் மற்றும் பொட்டாசியம் சத்துக்கள் இருப்பதால், எலும்புகளின் அடர்த்தியை அதிகரித்து எலும்பு முறிவு அபாயத்தைக் குறைக்கிறது.

இதய ஆரோக்கியம்: இரத்தத்தில் உள்ள ட்ரைகிளிசரைடு அளவைக் குறைத்து, இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது, இது இதய நோய்களைத் தடுக்கிறது.

இரத்த சோகை நீங்கும்: இரும்புச்சத்து நிறைந்துள்ளதால், இரத்த சோகை (ANEMIA) உள்ளவர்களுக்கு ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவுகிறது.

சர்க்கரை நோய் கட்டுப்பாடு: நீரில் ஊறவைத்த அத்திப்பழம் குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளதால், சர்க்கரை நோயாளிகளுக்கு நன்மை பயக்கும்.

தோல் ஆரோக்கியம்: இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் சருமத்தை ஆரோக்கியமாகவும், இளமையாகவும் வைத்திருக்க உதவுகின்றன.

பயன்படுத்தும் முறை:

உலர்ந்த அத்திப்பழத்தை இரவு முழுவதும் தண்ணீரில் ஊறவைத்து, காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடலாம்.

புதிய அத்திப்பழங்களை அப்படியே சாப்பிடலாம்.

குறிப்பு: அத்திப்பழத்தில் அதிக சர்க்கரை உள்ளதால், நீரிழிவு நோயாளிகள் மற்றும் உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் மிதமான அளவில் உட்கொள்வது நல்லது.

# அரசன் ஷூட்டிங் நிறுத்தம்.. சிம்புவுக்கு ஆதரவாக டிஆர் காட்டமான கேள்வி! நடிகர் சங்கம் வராதது ஏன்?



அரசன் படத்தின் ஷூட்டிங் தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. வெற்றிமாறன் இயக்கத்தில் உருவாகி வரும் இந்த படத்தை கலைப்புலி தாணு தயாரிக்கிறார்.

வெற்றிமாறனின் வடசென்னை பின்னணியில் இந்த படத்தின் கதை இருக்கிறது. ஷூட்டிங் விறுவிறுப்பாக நடந்து வந்த நிலையில் தயாரிப்பாளர் சங்கம் மற்றும் FEFSI அமைப்பு போட்ட தடையால் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு உள்ளது.

வெந்து தணிந்தது காடு படத்திற்கு பிறகு வேல்ஸ் நிறுவனத்தின் ஐசரி கணேஷ் சிம்புவுக்கு ஒரு புது படத்திற்கு 5 கோடி அட்வான்ஸ் கொடுத்தார். படத்தின் முதற்கட்ட பணிக்கும் பெரிய தொகையை அவர் செலவழித்து இருக்கிறார். அந்த தொகையை திருப்பி தரவேண்டும் என சிம்பு மீது ஐசரி கணேஷ் புகார் கொடுத்திருக்கிறார். அந்த பிரச்சனை காரணமாக தான் அரசன் ஷூட்டிங் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசன் ஷூட்டிங் நிறுத்தப்பட்டு இருப்பதற்க்கு சிம்புவின் அப்பா டிஆர் கண்டனம் தெரிவித்து பேசி இருக்கிறார்.

'தயாரிப்பாளர் சங்கமும், அதற்கு துணையாக இருக்கும் தென்னிந்திய தொழிலாளர் சம்மேளனமும் அறம் தவறி நடக்க கூடாது. ஐசரி கணேஷ் வழக்கு தொடர்ந்தபோது சிம்புவின் பிரதிநிதியாக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடி நான் வென்று வந்திருக்கிறேன். அட்வான்ஸ் தொகை சிம்புவுக்கே சொந்தம் என தீர்ப்பு வழங்கினார் நீதிபதி.'

'அந்த வழக்கை காட்டி அரசன் ஷூட்டிங்கை நிறுத்தி இருக்கிறார்கள். தயாரிப்பாளருக்காக தயாரிப்பாளர் சங்கம் வரும்போது, ஒரு நடிகருக்கான தென்னிந்திய நடிகர் சங்கம் உடன் நிற்க வேண்டும். போராட வேண்டும். உரிமையை பெற்று கொடுக்க வேண்டும் என கோரிக்கை வைக்கின்றேன்.'

இவ்வாறு டி.ஆர் கூறி இருக்கிறார்.




பிரியங்கா மோகன் ட்ரெண்டி உடையில் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். இதோ.

# அஜித் படம் ட்ராப்.. 'நீ ஒரு மொக்க பீஸ்'னு சொன்னாங்க: உருக்கமாக பேசிய விக்னேஷ் சிவன்



விக்னேஷ் சிவன் இயக்கிய LIK படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்ச்சி இன்று நடந்தது. அதில் மேடையில் பேசிய விக்னேஷ் சிவன் தான் அஜித்தை வைத்து இயக்க இருந்த படம் ட்ராப் ஆனது பற்றி உருக்கமாக பேசி இருக்கிறார்.

நான் ஒரு மிகப்பெரிய படம் எடுக்கும் வாய்ப்பு அமைந்தது. ஆனால் கல்யாண மண்டபத்தில் தாலி காட்டும் முன் பெண் எழுந்து போய்விட்டால், அந்த பெண்ணுக்கு எப்படி கல்யாணம் ஆவது கஷ்டமோ, அந்தமாதிரி ஒரு படம் நிற்கும்போது, அதில் இருந்து TAKE-OFF ஆகி இன்னொருவரை நம்ப வைப்பது ரொம்ப கஷ்டம்.

சின்னதா பண்ணுங்க, ஈஸியா பண்ணுங்க என எல்லோரும் சொன்னது என் காதில் கேட்டது. அவர்கள் மறைமுகமாக சொல்வது என்னவென்றால்.. 'நீ ஒரு மொக்க பீஸ்' என்பது போல பார்க்கிறார்கள் என தெரிந்தது. அதை முதல் முறை அனுபவித்ததால் பரவாயில்லை, பல முறை நடந்திருக்கிறது. ஒரே இரவில் வாழ்க்கை தலைகீழாக மாறிவிட்டது.

இவ்வாறு விக்னேஷ் சிவன் உருக்கமாக பேசி இருக்கிறார்.

# பள்ளி குழந்தைகளின் கோடை கால விடுமுறை மகிழ்ச்சியாக - பயனுள்ளதாக - அர்த்தமுள்ளதாக மாற்றுவது எப்படி?

பள்ளி குழந்தைகள் கோடை கால விடுமுறை காலங்களில் மிகத் தெளிவான சிந்தனையும், நல்ல ஆரோக்கியமான உடல் நலம் பெறவும், தொடர் கால மேற்படிப்பு வாழ்க்கை சிறந்து விளங்கவும், சிறந்த எதிர்காலம் வளமாக மாறுவதற்கும் இந்த வழிகாட்டல் முறைகள் குழந்தைகளின் நுண் ஆற்றல் திறன் மேம்பாட்டிற்கு பெரும் நன்மைகள் சேர்க்கும். என்பது திண்ணம்.

**கோடை விடுமுறையின் முக்கியத்துவம்**

கோடை விடுமுறை என்பது வெறும் ஓய்வு மட்டுமல்ல - அது குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கான தங்கமான காலம். இந்த இரண்டு மாத காலகட்டம், பள்ளியில் கிடைக்காத திறன்களை வளர்க்கும் அரிய வாய்ப்பாகும். உளவியல் ஆராய்ச்சி கூறுவது: AMERICAN ACADEMY OF PEDIATRICS ஆய்வின்படி, கட்டமைக்கப்படாத விளையாட்டு நேரம் குழந்தைகளுக்கு ஆக்கபூர்வமான சிந்தனை, சுய ஒழுக்கம், மன அழுத்தத்தை சமாளிக்கும் திறன் ஆகியவற்றை வளர்க்கிறது. விடுமுறையை திட்டமிட்டு கழிக்கும் குழந்தைகள் புதிய கல்வியாண்டில் 23% அதிக கவனத்துடன் படிக்கிறார்கள்.

**விடுமுறையின் 5 பரிமாணங்களை பார்க்கலாம். முதலில் பரிமாணம் பயன் என்ன?**

**உடல் வளர்ச்சி**

ஆரோக்கியமான எலும்பு, தசை, நோய் எதிர்ப்பு சக்தி

**மன வளர்ச்சி கற்பனை, படைப்பாற்றல், சிந்தனை விரிவாக்கம்**

சமூக வளர்ச்சி

நட்பு, ஒத்துழைப்பு, தலைமைத்துவம்

**ஆன்மீக வளர்ச்சி தன்னை அறிதல், நன்றியுணர்வு, மதிப்புகள்**

திறன் வளர்ச்சி கலை, இசை, தொழில்நுட்பம், விளையாட்டு

**தினசரி கட்டமைப்பு -**

ஒரு இலட்சிய அட்டவணை தெளிவான நாள் அட்டவணை குழந்தைக்கு பாதுகாப்பு உணர்வையும் ,நோக்கத்தையும் தருகிறது. ஆனால் இது கட்டாயமாக இல்லாமல், நெகிழ்வான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

**நேரம் செயல்பாடு நோக்கம்**

காலை 6:00-6:30 யோகா / ஓட்டம் / விளையாட்டு உடல் சுறுசுறுப்பு

காலை 6:30-7:00 தியானம் / நன்றி சொல்லுதல் மன அமைதி

காலை 7:00-8:00 காலை உணவு + குடும்ப நேரம் பிணைப்பு, ஊட்டம்

காலை 8:00-10:00 படைப்பு நேரம் (கலை/எழுத்து/இசை) திறன் வளர்ச்சி

காலை 10:00-12:00 கற்றல் செயல்பாடு (புத்தகம்/பயிற்சி) மூளை வளர்ச்சி

மதியம் 12:00-2:00 உணவு + ஓய்வு மீட்டெடுப்பு

மதியம் 2:00-4:00 சேவை / பயணம் / புதிய திறன் அனுபவம்

மாலை 4:00-6:00 விளையாட்டு / நண்பர்கள் சமூக வளர்ச்சி

மாலை 6:00-7:00 குடும்ப உரையாடல் / கதை உணர்ச்சி இணைப்பு

இரவு 7:00-8:00 வாசிப்பு / படைப்பு எழுத்து அறிவு விரிவாக்கம்

இரவு 8:30-9:00 தூக்கம் தயாரிப்பு + கண்ணாடி நேரம் சுய மதிப்பீடு செய்தல் வேண்டும்.

**உடல் ஆரோக்கியம் - உற்சாக வாழ்க்கை**

**விளையாட்டும் உடற்பயிற்சியும்**

கோடை காலம் என்பது திரை நேரத்தில் கழிக்கும் காலமாக மாறக்கூடாது. சூரிய ஒளியில் விளையாடுவது வைட்டமின் D தருவதோடு, மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது.

**பாரம்பரிய தமிழ் விளையாட்டுகள்**

(அவசியம் கற்க வேண்டியவை)

✶ கிளிஞ்சல் விளையாட்டு - கை-கண் ஒருங்கிணைப்பு வளர்க்கும்

✶ பரமபதம் - நல்ல சிந்தனை, மற்றும் பொறுமை கற்றுத்தரும்

✶ கோலி விளையாட்டு - கணக்கு சிந்தனை வளர்க்கும்

✶கண்ணாமூச்சி, சடுகுடு - குழு உணர்வும் ஆரோக்கியமும்

✶ நொண்டி, தாண்டி ஆடல் - சமச்சீர் உணர்வு (BAL-ANCE) மேம்படும்

**நவீன விளையாட்டுகள்**

✶ நீச்சல் பயிற்சி - முழு உடல் ஆரோக்கியம்

✶ சைக்கிள் சவாரி - இதயம் மற்றும் நுரையீரல் வலுப்படும்

✶ யோகா / உடற்பயிற்சி - மனநலம் மற்றும்

**உடல் நலம் ஒருங்கிணைப்பு**

✶ கால்பந்து / கைப்பந்து / கிரிக்கெட் - குழு விளையாட்டு திறன் மேம்பாடு.

சத்தான உணவு கோடை கால அட்டவணை

நேரம், உணவு, ஏன் சிறந்தது? என்ற விபரம் அடிப்படையில் படி

**காலை உணவு : இட்லி + சாம்பார் / தோசை + சட்னி : நார்ச்சத்து, புரதம்**

**காலை சிற்றுண்டி: பழங்கள் (வாழை, மாம்பழம்) : இயற்கை சர்க்கரை, வைட்டமின்**

**மதிய உணவு: சாதம் + கீரை + மோர் :**

இரும்பு சத்து, குளிர்ச்சி

**மாலை சிற்றுண்டி: கடலை / கொழுக்கட்டை / நீர் மோர் : புரதம், வயிறு நிறைவு**

**இரவு உணவு**

: கஞ்சி / கோதுமை ரொட்டி + பருப்பு :

**எளிதில் செரிமானம்**

நாள் முழுவதும் 3-4 லிட்டர் தண்ணீர் / இளநீர் நீரிழப்பு தடுப்பு

மூளை வளர்ச்சி - அறிவு பயணம்

**வாசிப்பு திட்டம்**

ஒவ்வொரு குழந்தையும் இந்த கோடையில் குறைந்தது 5-8 புத்தகங்கள் வாசிக்க வேண்டும். வாசிப்பு என்பது மூளையின் 'உடற்பயிற்சி'.

**வயதுக்கேற்ற புத்தக பரிந்துரைகள்:**

6-8 வயது: படக்கதை புத்தகங்கள், சிறார் மின்இதழ், புதிய சிந்தனை பஞ்சதந்திரம், ஈசாப்கதைகள்

9-11 வயது: திருக்குறள் விளக்கம், தமிழ் புராணக் கதைகள், அறிவியல் கதைகள்

12-14 வயது: அப்துல் கலாம் வாழ்க்கை வரலாறு, தமிழ் இலக்கியம் சுருக்கம், வரலாற்று நாவல்கள்

15+ வயது: மனோவியல் புத்தகங்கள், நிர்வாக திறன், தத்துவம்

புதிய திறன்கள் கற்றல் (SKILL BUILDING)

திறன் வகை குறிப்பிட்ட செயல்பாடு பயன்

மொழி திறன் ஒரு புதிய மொழி - பிடித்தமான பிற மொழிகள் / ஆங்கிலம் மற்றும் பிற உலக நாடுகளின் மொழிகள் ஏதேனும் ஒன்று,

**வேலைவாய்ப்பு, மூளை வளர்ச்சி**

கணித திறன் VEDIC MATHEMATICS, LOGIC PUZZLES வேகமான கணக்கிடல்

**தொழில்நுட்பம் கோடிங் அடிப்படை (SCRATCH/PYTHON) எதிர்கால திறன்**

படைப்பு கலை ஓவியம், கவிதை, கதை எழுதல் உணர்ச்சி வெளிப்பாடு

**இசை / நடனம் கர்நாடக சங்கீதம் / பரதநாட்டியம் கலாச்சாரம், ஒழுக்கம்**

சமையல் எளிய உணவு தயாரிப்பு தன்னிறைவு, பொறுமை.

**படைப்பாற்றல் திட்டங்கள்**

1. 'என் கோடை விடுமுறை நாட்குறிப்பு' - ஒவ்வொரு நாளும் 5 வரி எழுதுதல்
2. ஒரு சிறு கதை அல்லது கவிதை நூல் உருவாக்குதல்
3. விஞ்ஞான சோதனைகள் - வீட்டிலேயே செய்யக்கூடியவை
4. தோட்டம் அமைத்தல் - ஒரு செடியை விதைப்பு முதல் முதல் அறுவடை வரை குறிப்புகள் எழுதி பராமரித்தல்.
5. ஒரு புகைப்பட நினைவு ஆல்பம் உருவாக்குதல் திறன் பயிற்சி மேம்படும்.

**சமூக மற்றும் உணர்ச்சி வளர்ச்சி**

**குடும்ப பிணைப்பை வலுப்படுத்துதல்**

கோடை விடுமுறை என்பது குடும்பத்துடன் நேரம் செலவிட சிறந்த வாய்ப்பு. சமூக ஊடகங்கள் தரும் செயற்கை இணைப்பை விட குடும்ப நேரம் குழந்தைக்கு உண்மையான பாதுகாப்பு உணர்வை தருகிறது.

**குடும்ப செயல்பாடுகள்:**

வாரந்தோறும் ஒரு குடும்ப பயணம் | சமையல் கற்றல் - தாத்தா பாட்டி பாரம்பரிய சமையல் | கதை சொல்லுதல் மாலை நேரம் | குடும்ப விளையாட்டு மாலை | வீட்டு தோட்டம் அமைத்தல் | பெரியோரிடம் அவர் வாழ்க்கை கதை கேட்டல்

**சமூக சேவை - இளம் தலைவர்களை உருவாக்குதல்**

மற்றவருக்கு உதவுவது குழந்தையின் தன்னம்பிக்கையையும் நேர்மறை உலக பார்வையையும் வளர்க்கிறது.

அனாதை இல்லம் / முதியோர் இல்லம் சந்திக்கவும்

✶ சுற்றுச்சூழல் சேவை - மரம் நடுதல், குப்பை அகற்றல்

✶ படிக்க தெரியாதவர்களுக்கு அடிப்படை கற்றல் உதவி

✶ விலங்கு காப்பகம் சந்திப்பு மற்றும் கவனிப்பு

✶ வட்டார சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

நண்பர்களுடன் தரமான நேரம் செயல்பாடு வளர்க்கும் திறன்:

குழு புத்தக வாசிப்பு, பிற கிளப் விவாதம், கேள்வி கேட்கும் திறன்:

கூடாரம் அமைத்தல் / NATURE CAMP, சிக்கல் தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு

குழு ஓவியம் / சிற்பம் படைப்பாற்றல், பகிர்தல்

நாடகம் / சிறு நாட்டுப்புற நிகழ்ச்சி தன்னம்பிக்கை, மொழி திறன்

விளையாட்டு போட்டிகள் போட்டி மனம், தோல்வியை ஏற்றல்.

தெளிவான சிந்தனை - மன ஆரோக்கியம்

தியானம் மற்றும் சுய விழிப்புணர்வு

நவீன உளவியல் ஆய்வுகள் குழந்தைகளுக்கு தினமும் 10-15 நிமிட MINDFULNESS அல்லது தியானம் இருந்தால் கவனம், நினைவாற்றல் மற்றும் உணர்ச்சி கட்டுப்பாடு கணிசமாக மேம்படுவதாக அறிவியல் ஆய்வுகள் மிக தெளிவாக தெரிவிக்கின்றன.





**-கோ.சுரேஷ்குமார்**
கோவில்பட்டி

**தினம் ஒரு தலைவர்கள்**

# சியாமா பிரசாத் முகர்ஜி வரலாறு

சியாமா பிரசாத் முகர்ஜி (6 சூலை 1901 23 சூன் 1953), இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தைச் சார்ந்த கல்வியாளர், வழக்கறிஞர் மற்றும் அரசியல்வாதி ஆவர். சுதந்திர இந்தியாவின் முதல் நடுவண் அரசில் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சராக, ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் 15 ஆகத்து 1947 முதல் 6 ஏப்ரல் 1950 வரை இருந்தவர். ஜவகர்லால் நேருவுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால், காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேறி, 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை நிறுவினார். பின் இக்கட்சி பாரதிய ஜனதா கட்சி என உருமாறியது.

இளமை வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி மேற்கு வங்காள மாநிலத்தின் தலைநகரான கல்கத்தாவில், உயர்நீதிமன்ற நீதியரசரும், கொல்கத்தா பல்கலைக் கழக துணைவேந்தருமான சர் அசுதோசு முகர்சி - ஜோகமாயா தம்பதியருக்கு 6 சூலை 1901இல் பிறந்தார். மனைவி சுதா தேவி, இளமையில் மறைந்தபின், இறுதி வரை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளவில்லை.

முகர்ஜி கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியிலும், வங்க மொழியிலும் பட்டம் பெற்றவர். 1926இல் இங்கிலாந்து சென்று சட்டம் பயின்று, 1927இல் பாரிஸ்டர் ஆனார். தனது இளம் வயதில் (33 வயதில்) கல்கத்தா பல்கலைக்கழகத்தில் 1934 முதல் 1938 முடிய துணை வேந்தராக இருந்தவர்.

முகர்ஜி தனது மனைவி சுதா தேவியுடன் 11 ஆண்டுகள் குடும்பம் நடத்தி, ஐந்து குழந்தைகளைப் பெற்றவர். பின்னர் மனைவி சுதா தேவி விஷக் காய்ச்சலால் இறந்தார்.

அரசியல் வாழ்க்கை

சியாமா பிரசாத் முகர்ஜி 1929ஆம் ஆண்டில் மேற்கு வங்காள மாகாண சட்ட இய்மேலவைக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் சார்பில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, மேற்கு வங்க மாகாண சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வென்றார். 1941 1942 ஆண்டில் அம்மாநில நிதி அமைச்சராக பணி செய்தார்.

1937 1941



காலகட்டத்தில் விவசாய- மக்கள் கட்சி மற்றும், முஸ்லிம் லீக் கட்சிகளின் கூட்டணி அரசின் போது, எதிர்கட்சித் தலைவரானார். பின்னர் இந்து மகாசபையில் இணைது, இந்து மக்களுக்காக குரல் கொடுத்தார். 1944ஆம் ஆண்டில் இந்து மகாசபையின் தலைவரானார். இந்திய விடுதலைக்குப் பின்



ஜவகர்லால் தலைமையிலான இடைக்கால இந்திய நடுவண் அமைச்சரவையில் பங்கேற்ற அமைச்சர்கள்; (இடமிருந்து வலம் ) அம்பேத்கர், ரபி அகமது கித்வாய், சர்தார் பல்தேவ் சிங், மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு. இராஜேந்திர பிரசாத், வல்லபாய் படேல், ஜான் மத்தாய், ஜெகசீவன்ராம், அம்ருத் கௌர், சியாமா பிரசாத் முகர்ஜி, (நிற்பவர்கள் - இடமிருந்து வலம்) குர்சேத் லால், ஆர். ஆர். திவாகர், மோகன்லால், என். கோபால்சாமி அய்யங்கார், என். வி. காட்கில், கே. சி. நியோகி, ஜெய்ராம் தாஸ் தௌலத்ராம், கே. சந்தானம், சத்திய நாராயணன் சின்கா மற்றும் பி. வி. கேஸ்கர்.

பிரதம மந்திரி ஜவகர்லால் நேருவின் தலைமையிலான, விடுதலை இந்தியாவின் இடைக்கால நடுவண் அரசில், சியாமா பிரசாத் முகர்ஜி வணிகம் மற்றும் தொழில் அமைச்சரானார்.

1950ஆம் ஆண்டில்,லியாகத்-நேரு ஒப்பந்தம் தொடர்பான சர்ச்சை காரணமாக, முகர்ஜி 6 ஏப்ரல் 1950ஆம் ஆண்டில் நேருவின் அமைச்சரவையிலிருந்து விலகியதால், முகர்ஜி மேற்கு வங்க மக்களின் நாயகன் ஆனார்.

ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் தலைவர் எம். எஸ். கோல்வால்கருடன் கலந்தாய்வு செய்த பின், 21 அக்டோபர் 1951ஆம் ஆண்டில் பாரதிய ஜனசங்கம் கட்சியை தில்லியில் தோற்றுவித்து, அக்கட்சியின் முதல் அகில இந்தியத் தலைவரானார். 1952ஆம் ஆண்டில் நடந்த முதல் இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனசங்கம் கட்சி மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதில் ஒரு தொகுதியில் முகர்ஜி வெற்றி பெற்றவர்.

ஜம்மு காஷ்மீர் மாநில சிறப்புத் தகுதி குறித்து முகர்ஜியின் கருத்து

முதன்மைக் கட்டுரை: இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 370

ஜம்மு காஷ்மீர் மாநில அரசிற்கு தனிக் கொடி, தனிச் சின்னம், தனி பிரதம மந்திரி இருப்பதை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஒரு நாட்டில் இரண்டு அரசியல் அமைப்பு சட்டமும், தேசிய சின்னமும் இருக்க இயலாது என வாதிட்டார். மேலும் ஜம்மு காஷ்மீர் மாநில பிரதமரின் அனுமதியின்றி, இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குள் செல்ல இயலாது என்ற விதியை முகர்ஜி கடுமையாக எதிர்த்தார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தனிக் கொடி, தனி பிரதம மந்திரி போன்ற சிறப்பு தகுதிகள் வழங்கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ நீக்கக் கோரி, முகர்ஜி தலைமையிலான பாரதிய ஜனசங்கம், இந்து மகாசபை மற்றும் ராம ராஜ்ஜிய சபையுடன் இணைந்து குரல் கொடுத்து, சத்தியாகிரகப் போராட்டங்களில் ஈடுபட்டது.

காஷ்மீர் அரசின் அனுமதி அடையாள அட்டையின்றி காஷ்மீரில் உள்ள லக்கன்பூர் என்ற ஊரில் நுழைந்த சியாமா பிரசாத் முகர்ஜியை, ஜம்மு காஷ்மீர் மாநில காவல் துறையினரால், 11 மே 1953இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 23 சூன் 1953இல் விஷக்காய்ச்சலால் மரணமடைந்தார் என காவல் துறை அறிவித்தது.

காவல் துறையினரின் காவலில் இருந்த சியாமா பிரசாத் முகர்ஜியின் மரண இரகசியம் குறித்து விசாரிக்க, தனி விசாரணை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற முகர்ஜியின் தாயாரின் கோரிக்கையை பிரதம அமைச்சர் ஜவகர்லால் நேரு ஏற்கவில்லை. இதனால் இன்று வரை முகர்ஜியின் மரண சர்ச்சை தீரவில்லை.

சியாமா பிரசாத் முகர்ஜியின் கைது, ஜவகர்லால் நேருவின் சதித் திட்டம் என அடல் பிகாரி வாஜ்பாய் 2004இல் குறிப்பிட்டுள்ளார்.

# மகனை பள்ளியில் சேர்க்கச் சென்ற தம்பதிக்கு நேர்ந்த சோகம்

**அமராவதி, ஏப்.10:**


ஆந்திர மாநிலம் ராஜமகேந்திரவரம் பகுதியைச் சேர்ந்த வீரராஜு (வயது 46) அவரது மனைவி வீர சைலஜா (38) மற்றும் இவர்களது மகன் யஷ்வந்த் (16) சமீபத்தில் 10-ம் வகுப்பு தேர்வு எழுதியிருந்தார். அவரை ஐதராபாத்தில் பிளஸ்-1 படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணிய பெற்றோர். அதற்கான பள்ளிகளை நேரில் பார்ப்பதற்காக மகனுடன் காரில் சென்றனர்.

கம்மம் மாவட்டம் கொனிஜர்லா அருகே சாகர் கால்வாய் பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த லாரி அவர்கள் கார் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் லாரியின் சக்கரம் கார் மீது ஏறியதால் கார் முழுவதும் நொறுங்கியது. இந்த விபத்தில் காரை ஓட்டிய வீரராஜு காரின் முன்பகுதியில் சிக்கிக் கொண்டார். சம்பவத்தை நேரில் பார்த்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விபத்தில் படுகாயமடைந்த யஷ்வந்த் 'என் பெற்றோரை காப்பாற்றுங்கள்' என்று கதறி அழுதது அங்கு இருந்தவர்களை உருக வைத்தது.

அருகே இருந்தவர்கள் 3 பேரையும் மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி வீரராஜு மற்றும் வீரசைலஜா ஆகிய 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். யஷ்வந்த்க்கு தொடர்ந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்தால் அந்த பகுதியில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராஜஸ்தானில் மர்ம காய்ச்சலுக்கு 5 குழந்தைகள் பலி

## சுகாதார நிபுணர்கள் தீவிர ஆய்வு



**சலும்பர் ஏப்.10:**

ராஜஸ்தான் மாநிலம் சலும்பர் மாவட்டத்துக்கு உட்பட்ட லசாடியா பகுதியில் உள்ள 2 கிராமங்களில் கடந்த 1 முதல் 5-ம் தேதி வரை 5 குழந்தைகள் பலியாகினர். மர்ம காய்ச்சல் தாக்கி பலியான இந்த குழந்தைகள் 2 முதல் 4 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

அடுத்தடுத்து குழந்தைகள் பலியான சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது. எனவே பல்வேறு நிபுணர்கள் அடங்கிய மருத்துவக்குழுவினர் அந்த பகுதியில் முகாமிட்டு தீவிர ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

மாநில முதல்-மந்திரி பஜன்லால் சர்மாவும் இந்த விவகாரத்தை தீவிரமாக எடுத்து நிலைமையை ஆய்வு செய்து வருகிறார். குழந்தைகள் இறப்புக்கான காரணம் அறியவும், தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

# மேற்கு வங்க தேர்தல் பிரச்சாரத்தில் மீன் அரசியல்



**புதுடெல்லி, ஏப்.10:**

மேற்கு வங்க மக்கள் பல நூற்றாண்டுகளாக மீன் உணவுக்குப் பழகி விட்டனர். மேலும், காளி, துர்கா உள்ளிட்ட கடவுள்களுக்கும் மீன் உணவுகளைப் படைக்கின்றனர். அங்கு மீன் உணவை சைவமாகக் கருதி உண்ணும் பிராமணர்களும் அதிகம். இந்த மீன் உணவு தேர்தல் பிரச்சாரத்தில் பேசுபொருளாகி உள்ளது.

இது குறித்து, முதல்வர் மம்தா பிரச்சாரத்தில் பேசுகையில், "பாஜக ஆட்சிக்கு வந்தால், வங்காள மக்களின் உணவுப் பண்பாடு, குறிப்பாக நமக்கு மிகவும் பிடித்தமான மீன் மற்றும் இறைச்சி உண்ணுவதைத் தடை செய்து விடுவார்கள்" என்றார். இதே கருத்தை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மற்ற தலைவர்களும் மீன் உணவைப் பயன்படுத்தி பாஜகவை விமர்சிக்கின்றனர். இதற்கு பதிலடியாக மீன் உணவைப் புகழ்ந்தும், பாரம்பரியத்தைப் போற்றியும் பாஜக பிரச்சாரம் செய்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் மீன் சந்தைகளுக்குச் செல்வதும், மீன் வாங்குவதும், அதைப் பொது வெளியில் உண்பதையும் வழக்கமாக்கி கொண்டுள்ளனர். மாநில பாஜகவின் மூத்த தலைவரும், கரக்பூர் நகர தொகுதி வேட்பாளருமான திலீப் கோஷ், மீன் உணவு மீதுள்ள ஆர்வத்தை வெளிப்படையாக பிரச்சாரம் செய்து வருகிறார். இவர் பாஜகவின் தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் பிரச்சாரகராக இருந்தவர். சமீபத்தில் திலீப் கோஷ் கரக்பூரில் உள்ள ஒரு மீன் சந்தையில் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடினார்.

அது தொடர்பான புகைப் படங்களையும் அவர் தன் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். பிதான் நகர் தொகுதி வேட்பாளர் சரத்வத் முகர்ஜி சமீபத்தில் ஒரு பெரிய கட்லா மீனை கையில் ஏந்தி வீதிகளில் நடத்திய பிரச்சாரம் வைரலானது. அதேபோல், கொல்கத்தாவை ஒட்டியுள்ள ராஜர்ஹாட்-கோபால்பூர் தொகுதி பாஜக வேட்பாளர் தருண்ஜோதி திவாரி, மீன் சந்தைக்குச் சென்று பிரச்சாரம் செய்ததுடன், அங்கே மீன் சாதம் சாப்பிட்டுக் கொண்டே பேட்டியளித்தார்.

இதனால் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரின் தேர்தல் வியூகம் பிசுபிசுத்து வருகிறது. எனினும், மீன் விவகாரத்தில் பாஜக செய்வது போலித்தனம். இதை நம்ப வேண்டாம் என்று ஆளும் திரிணமூல் கட்சியினர் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

# மாட்டிறைச்சி சாப்பிட தடை இல்லை: அசாம் முதல்வர் ஹிமந்தா விளக்கம்

**குவாஹத்தி, ஏப்.10:**



அசாமில் மாட்டிறைச்சி உண்பது குறித்த தனது நிலைப்பாட்டை முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெளிவுபடுத்தியுள்ளார். என்றாலும் முந்தைய நிலைப்பாட்டில் இருந்து அவர் பின்வாங்கி விட்டதாக சமாஜ்வாதி, ஆம் ஆத்மி ஆகிய கட்சிகள் விமர்சனம் செய்துள்ளன.

இது தொடர்பாக ஹிமந்த பிஸ்வா சர்மா, செய்தியாளர்களிடம் கூறுகையில், "முஸ்லிம்கள் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள். அதற்குத் தடை ஏதும் இல்லை. அசாமில் மாட்டிறைச்சி சாப்பிடும் முஸ்லிம் சமூகம் பெரிய அளவில் உள்ளது. அவர்களைச் சாப்பிட வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. உங்கள் வீடுகளுக்குள் வைத்துச் சாப்பிடுங்கள், பொது இடங்களில் வேண்டாம் என்றுதான் சொல்கிறோம்" என்றார்.

"மாட்டிறைச்சி சாப்பிடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களை விடமாட்டேன்" என்று ஹிமந்தா ஏற்கெனவே கூறியிருந்த நிலையில் தற்போது அவர் மாறுபட்ட கருத்தை கூறியிருப்பது அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஹிமந்தாவின் கருத்தை சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்து, "பாஜகவை அகற்றுவோம், கோமாதாவை பாதுகாப்போம்" என்று பதிவிட்டுள்ளார்.

# காவல் நிலையத்தில் வாலிபர் மரணம்; 8 போலீசார் மீது கொலை வழக்கு பதிவு

**மும்பை, ஏப்.10:**

மும்பை வடலா ரெயில்வே போலீசார், கடந்த 2014-ம் ஆண்டு கொள்ளை வழக்கு தொடர்பாக அக்னெல்லோ வால்டாரிஸ் என்ற வாலிபரையும், அவரது நண்பர்கள் 3 பேரையும் பிடித்து விசாரித்தனர். அப்போது போலீஸ் காவலில் இருந்தபோது அக்னெல்லோ வால்டாரிஸ் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

அவர் தப்பி ஓடியபோது ரெயிலில் அடிபட்டு இறந்ததாக போலீசார் கூறினர். ஆனால், அவர் போலீசாரின் சித்ரவதையால்தான் உயிரிழந்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பான வழக்கை விசாரித்த கீழ் கோர்ட்டு, சம்பந்தப்பட்ட 8 போலீசார் மீது கொலை வழக்கு பதிவு செய்ய கடந்த 2022-ம் ஆண்டு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து இன்ஸ்பெக்டர் ஜிதேந்திர ரத்தோடு உள்ளிட்ட 8 போலீசாரும் மும்பை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இதனை விசாரித்த நீதிபதிகள் ஏ.எஸ்.கட்காரி, ஷியாம் சந்தக் ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை தள்ளுபடி செய்து கீழ் கோர்ட்டு உத்தரவை உறுதி செய்தனர். அதில் நீதிபதிகள் கூறி இருப்பதாவது:-

"இறந்தவர்களால் நீதி கேட்டு கதறமுடியாது. அவர்களுக்காக நீதி கேட்பது உயிரோடு இருப்பவர்களின் கடமை. இந்த வழக்கில் போலீசார் தரப்பில் சொல்லப்படும் காரணங்களில் முரண்பாடுகள் உள்ளன. வாலிபர் உயிரிழந்தது கொலையா? அல்லது விபத்தா? என்பதில் பெரும் சர்ச்சை உள்ளது. உயிரிழந்த வாலிபர் மற்றும் அவருடன் பிடிபட்டவர்கள் சட்டவிரோதமாக அடைத்து வைக்கப்பட்டு, கொடூரமான முறையில் சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர். மருத்துவ ஆதாரங்களும், மற்றவர்களின் வாக்குமூலங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. கண்காணிப்பு கேமரா காட்சிகளும் முறையாக பாதுகாக்கப்படவில்லை. எனவே, போலீசார் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. 8 போலீசார் மீதும் கொலை உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடரவேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# இறுதி வாக்காளர் பட்டியலை எதிர்த்து நீதிமன்றத்தில் டிஎம்சி முறையிடும்: மம்தா

**கொல்கத்தா, ஏப்.10:**

மேற்குவங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியின்போது (எஸ்ஐஆர்) 91 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

இது தொடர்பான மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், நீக்கப்பட்டவர்களில் விண்ணப்பித்த 60 லட்சம் மனுக்களை மாவட்ட நீதிபதிகள் பரிசீலனை செய்ய உத்தரவிட்டது. இந்த பரிசீலனையில் 32 லட்சம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டு இறுதி செய்யப்பட்டது. 27 லட்சம் பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இது குறித்து முதல்வர் மம்தா பானர்ஜி கூறும்போது, "இறுதி வாக்காளர் பட்டியலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் திரிணமூல் காங்கிரஸ் (டிஎம்சி) மேல்முறையீடு செய்யும். பரிசீலனையின்போது நிராகரிக்கப்பட்ட 27 லட்சம் பேருக்கும் தேர்தலுக்கு முன்பாக வாக்குரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்படும்" என்றார்.

# குஜராத் மக்கள் குறித்த கருத்து: மன்னிப்பு கோரினார் கார்கே

**புதுடெல்லி, ஏப்.10:**

காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அண்மையில் கேரளாவில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

இடுக்கி நகரில் அவர் பேசுகையில், "கேரள மக்களைத் தவறாக வழிநடத்தாதீர்கள், அவர்கள் மிகவும் புத்திசாலிகள், படித்தவர்கள். பிரதமர் மோடி, பினராயி விஜயன் இருவரும் குஜராத்திலும் மற்ற இடங்களிலும் கல்வியறிவில்லாத மக்களை ஏமாற்றலாம். ஆனால் கேரள மக்களை ஏமாற்ற முடியாது" என்றார்.

குஜராத் மக்கள் குறித்த கார்கேவின் இந்த கருத்து மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்நிலையில் மல்லிகார்ஜுன கார்கே நேற்று 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சமீபத்தில் கேரளாவில் எனது தேர்தல் உரையில் கூறப்பட்ட சில கருத்துக்கள் வேண்டுமென்றே தவறாக திரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எனது மனமார்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். குஜராத் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை" என்று கூறியுள்ளார்.

# மேற்காசிய மோதல் எதிரொலி: 7.88 லட்சம் பேர் இந்தியாவுக்கு பாதுகாப்பாக பயணம்

**புதுடெல்லி, ஏப்.10:**

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி வான்வழியே கடுமையாக தாக்குதல் நடத்திய பின்னர் மேற்காசியாவில் பதற்ற நிலை அதிகரித்தது. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே 2 வார காலத்திற்கு போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு உள்ளது.

மேற்காசிய சூழலுக்கு இடையே மத்திய வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் நிருபர்களிடம் இன்று பேசும்போது, வான்வெளி திறந்திருக்க கூடிய நாடுகளில் இருந்து விமானங்கள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

பிப்ரவரி 28-ந்தேதியில் இருந்து இந்தியாவுக்கு இதுவரை 7.88 லட்சம் பேர் பாதுகாப்பாக பயணம் செய்துள்ளனர். இஸ்ரேல், ஈராக், குவைத் மற்றும் பஹ்ரைன் நாடுகளில் வான்வெளி மூடப்பட்டும், விமானங்கள் பறக்க கட்டுப்பாடுகளும் உள்ளன.

அதனால், ஈரானில் இருந்து அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாடுகள் வழியே இந்தியாவுக்கு இந்தியர்களை தொடர்ந்து கொண்டு வருகிறோம்.

இஸ்ரேலில் இருந்து ஜோர்டான் மற்றும் எகிப்து வழியேயும், ஈராக்கில் இருந்து ஜோர்டான் மற்றும் சவுதி அரேபியா வழியேயும், குவைத் மற்றும் பஹ்ரைனில் இருந்து சவுதி அரேபியா வழியேயும் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளனர் என்று கூறியுள்ளார்.

# நாட்டின் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் வெற்றிகரமாக சோதனை




**ரிஷிகேஷ், ஏப்.10:**

நாட்டில் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

நாட்டில் கடல் வழித்தடம் மற்றும் நீர்நிலைகள் அதிகளவில் உள்ளன. விமான நிலையம் அமைக்க முடியாத இடங்களில் கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த திட்டமிடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ரிஷிகேஷில் வர்த்தக ரீதியாக கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்த ஸ்கைஹாப் ஏவியேஷன் என்ற நிறுவனம் தயாராகி வருகிறது.

இந்நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் கடந்த 6ம் தேதி தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்தது. கடல் விமானம் கங்கை நதியில் சுமூகமாக தரையிறங்கி, மேலெழும்பியதன் மூலம் இங்கு கடல் விமான போக்குவரத்து சாத்தியமாகும் எனத் தெரிகிறது.


இதுகுறித்து ஸ்கைஹாப் ஏவியேஷன் நிறுவனத்தின் நிறுவனர் அவானி சிங் கூறியதாவது: ஸ்கைஹாப் நிறுவனத்தின் கடல் விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது.

விமான போக்குவரத்துக்கான சான்றிதழ் பெறும் நடவடிக்கையில் நாங்கள் இறங்கியுள்ளோம். சான்றிதழ் கிடைத்தவுடன் வர்த்தக ரீதியாக நாங்கள் கடல் விமான போக்குவரத்தை தொடங்குவோம்.

லட்சத் தீவு பகுதியிலும் ஸ்கைஹாப் நிறுவனம் கடல் விமான போக்குவரத்தை தொடங்க திட்டமிட்டுள்ளது. இங்கு ஐந்து தீவுகளை இணைக்கும் வகையில் 19 இருக்கைகள் கொண்ட கடல் விமானத்தை முதல் கட்டமாக இயக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வரிசையில் நின்று வாக்களித்த மோகன் லால், சுரேஷ் கோபி!



**திருவனந்தபுரம், ஏப்.10:**

மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி குருவாயூர் தெற்கு தொகுதியில் தனது வாக்கை செலுத்தினார்.

கேரளத்திற்கு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்று வரும் நிலையில் நடிகர் மோகன் லால் காலையிலேயே வரிசையில் வாக்கு செலுத்தி தனது ஜனநாயகக் கடமையை ஆற்றினார். திருவனந்தபுரம், மூடவன்முகலில் உள்ள வாக்குச்சாவடிக்கு, நேமம் தொகுதியின் அமைச்சரும் இடது ஜனநாயக முன்னணி வேட்பாளருமான வி. சிவன்குட்டி, வாக்கு செலுத்தினார். அதே வாக்குச்சாவடியில் நடிகர் மோகன் லால் வாக்கு செலுத்தினார்.

மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி குருவாயூர் தெற்கு தொகுதியில் தனது வாக்கை செலுத்தினார்.

# மத மூட நம்பிக்கையை நீதிமன்றம் வரையறை செய்யலாம்: சபரிமலை வழக்கில் நீதிபதிகள் கருத்து

**புதுடெல்லி, ஏப்.10:**



கேரள மாநிலம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதி அளித்து, கடந்த 2018-ல் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்த மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல்சாசன அமர்வு விசாரிக்க தொடங்கியுள்ளது.

2-வது நாளான நேற்று மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, "மத வழக்கங்கள் மூட நம்பிக்கையா என்பதை நீதிமன்றங்கள் முடிவு செய்ய முடியாது. இந்த விவகாரத்தில் நீதிமன்றங்களுக்கு போதிய புலமை இல்லை. மாறாக அந்த மதத்தின் வழிபாட்டு ஆவணங்களை ஆய்வு செய்து தீர்வு காண வேண்டும்" என வாதிட்டார். அப்போது, நீதிபதி ஏ.அமானுல்லா, "மத மூட நம்பிக்கையை உச்ச நீதிமன்றம் வரையறை செய்ய முடியும்" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து துஷார் மேத்தா வாதிடுகையில்,

"அரசுக்கு சொந்தமான கோயில்களில் பூசாரிகளை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்க முடியாது. கடவுள் நம்பிக்கை அற்ற, கடவுள் நம்பிக்கை உள்ள அரசுகள் கூட கோயில்களில் பூசாரிகளை நியமிக்க முடியாது. கோயில் பூசாரிகள் பாரம்பரியமாக நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அரசு விவகாரங்களில் மதம் தலையிடாதபோது, மத விவகாரங்களில் அரசும் தலையிடக்கூடாது. அரவிந்தரை பின்பற்றுவோர் ஒரு மதப் பிரிவினராக உள்ளனர்" என்றார்.




## விஜய்யை பின்தொடர்ந்து சென்ற வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் 16 பேர் காயம்

**தூத்துக்குடி / திருநெல்வேலி, ஏப்.10:** தூத்துக்குடி, திருநெல்வேலியில் தவெக தலைவர் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளானதில் 16 பேர் காயமடைந்தனர்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் போட்டியிடும் தனது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்ய, தவெக தலைவர் விஜய் நேற்று சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையத்துக்கு வந்தார்.

காலை 11.45 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்த அவருக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர், பிரச்சார வேனில் ஏறிதிருநெல்வேலி நோக்கி விஜய் புறப்பட்டார்.

அவரது வேனை மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்து சென்ற இளைஞர்களை போலீஸார் ஆங்காங்கே தடுத்து நிறுத்தினர். வாகைகுளம் சந்திப்பு பகுதியில் சென்றபோது, அங்கு திரண்டிருந்த தொண்டர்கள் விஜய்க்கு வரவேற்பு கொடுத்தனர்.

பின்னர் மீண்டும், திருநெல்வேலி நோக்கி புறப்பட்டபோது, வாகைகுளம் பகுதியில் இருந்து தொண்டர்கள் மோட்டார் சைக்கிள்களில் விஜய் சென்ற பிரச்சார வேனை பின்தொடர்ந்து சென்றனர். ஒருவரையொருவர் முந்திச் செல்ல முயன்றபோது, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து ஏற்பட்டது.

கீழே விழுந்த மோட்டார் சைக்கிள் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்களும் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 7 பேர் லேசான காயமடைந்தனர்.

திருநெல்வேலி பாளையங்கோட்டை கேடிசி நகரில் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடை அருகே விஜய்யின் வாகனம் திரும்பியபோது கட்சி தொண்டர்கள், தடுப்புகளை மீறி வாகனத்தின் பின்னால் ஓடினர்.

அப்போது, காவல் துறையினர் சாலையில் தடுப்புகளை வைத்து மறித்தபோது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இந்த கூட்டத்தில் ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் மாட்டிக்கொண்டு வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை பகுதியில் விஜய் பிரச்சாரம் செய்தபோது, சாலையின் இருபுறமும் மக்கள் கூட்டம் அலைமோதியது. அப்போது, சாலையை கடக்க முயன்ற பெட்ரோல் நிலைய ஊழியர் ஒருவர் மீது எதிர்பாராத விதமாக அரசு பேருந்து மோதியது. இதில் அவரது தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனே அங்கிருந்த இன்ஸ்பெக்டர் கோகிலா அவரை மீட்டு தனது சொந்த வாகனத்தில் ஏற்றி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

விஜய்யின் வேனை பின்தொடர்ந்த இருசக்கர வாகனங்கள் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் பொட்டல் பகுதியில் 6 பேர் காயமடைந்தனர். நாரணம்மாள் புரத்தில் 2 பேர் காயமடைந்தனர். இதன்படி மொத்தம் 16 பேர் காயமடைந்தனர்.

## நெல்லை, தூத்துக்குடியில் விஜய் பிரசாரம்; 5 விபத்துகளில் 15 பேர் காயம்: த.வெ.க. நிர்வாகிகள் 11 பேர் மீது வழக்குப்பதிவு

**தூத்துக்குடி, ஏப்.10:** திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் நேற்று சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையத்துக்கு வந்தார். காலை 11.45 மணிக்கு விமான நிலையத்தை வந்தடைந்த விஜய்யை கட்சி நிர்வாகிகள் உற்சாகமாக வரவேற்றனர். பின்னர் பிரசார வேனில் ஏறி நெல்லை நோக்கி புறப்பட்டார். அவரது வேனை மோட்டார் சைக்கிள்களில் தொண்டர்கள் பின் தொடர்ந்து செல்வதை தவிர்ப்பதற்காக போலீசார் ஆங்காங்கே தொண்டர்களை தடுத்து நிறுத்தினர்.

வாகைகுளம் பகுதியில் இருந்து த.வெ.க. தொண்டர்கள் மோட்டார் சைக்கிள்களில் விஜய் சென்ற வேனை பின்தொடர்ந்து சென்றனர். அவர்கள் பிரசார வேனின் அருகே நெருங்கி சென்றனர். அப்போது ஒருவரையொருவர் முந்தி செல்ல முயன்றபோது, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து ஏற்பட்டது. கீழே விழந்த மோட்டார் சைக்கிள் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 7 தொண்டர்கள் காயம் அடைந்தனர்.

இதேபோல் நெல்லை மாநகர பகுதியில் விஜய் நகர்வலம் சென்றார். அப்போது அவரை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள்களில் பல இளைஞர்கள், ரசிகர்கள், தொண்டர்கள், நிர்வாகிகள் சென்றனர். பொட்டல் விலக்கு முதல் தாழையூத்து செல்லும் வழியில் எதிர்பாராத விதமாக 2 மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்கள் மீது அடுத்தடுத்து மற்றொரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்தில் சிக்கினர். இதில் 4 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

நெல்லை வண்ணார்பேட்டையில் விஜய் வருகையை முன்னிட்டு சுமார் 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே ரசிகர்கள், தொண்டர்கள் குவிந்தனர். அப்போது அங்குள்ள பெட்ரோல் பங்கில் வேலைபார்க்கும் துரை என்ற வாலிபர் விஜய்யை பார்க்கும் ஆர்வத்தில் சாலையை கடந்து செல்ல முயன்றார். அப்போது அந்த வழியாக வந்த அரசு பஸ் துரை மீது மோதியது. இதில் அவர் பஸ் சக்கரத்திற்குள் சிக்கி கொண்டார். இதனை பார்த்த போலீசார் உடனடியாக அந்த வாலிபரை மீட்டனர். மாநகர போக்குவரத்து புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் கோகிலா உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்தார். ஆம்புலன்ஸ் வர நேரம் ஆனதால் அவர் தனது காரில் அந்த வாலிபரை ஏற்றி பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

அதேபோல் கே.டி.சி.நகர் பகுதியில் விஜய்யை பின்தொடர்ந்து சென்ற 2 மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. இதில் 3 பேர் லேசான காயம் அடைந்தனர். இந்த நிலையில் திருநெல்வேலி, தூத்துக்குடியில் த.வெ.க. தலைவர் விஜயின் நேற்றைய பிரசார பயணத்தில் ஏற்பட்ட 5 விபத்துகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட போலீசார் த.வெ.க. நிர்வாகிகள் 11 பேர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

## ரெயில் நிலையங்களில் ஒரே நாளில் 36 கிலோ கஞ்சா பறிமுதல்

**சென்னை, ஏப்.10:** சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ரெயில்வே பாதுகாப்புப் படையினர் நேற்று தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஒடிசா மாநிலம் புவனேஸ்வரிலிருந்து சென்னை வழியாக புதுச்சேரி நோக்கி சென்ற விரைவு ரெயில் எழும்பூர் வந்தடைந்தது.

அந்த ரெயிலில் ஆர்.பி.எப். குழுவினர் ஏறி சோதனை நடத்தினார்கள். ரெயிலின் 3-ம் வகுப்பு ஏ.சி. பெட்டியில் சோதனையிட்டபோது அங்கு கேட்பாரற்று கிடந்த பையில் 31 கிலோ கஞ்சா பொட்டலங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு சுமார் ரூ.16 லட்சம் இருக்கும் என போலீசார் தெரிவித்தனர். பின்னர் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு இன்ஸ்பெக்டர் ராமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதை போன்று சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் குற்றப்பிரிவு போலீசார் நடத்திய சோதனையில் புருலியா எக்ஸ்பிரஸ் ரெயிலின் பொதுப் பெட்டியில் கேட்பாரற்று இருந்த பையில் 5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ.2.5 லட்சம் ஆகும். பின்னர் கஞ்சா திருவல்லிக்கேணி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தமிழ்ப் புத்தாண்டு, விஷு பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள், ரயில்கள் இயக்கம்



**சென்னை, ஏப்.10:** தமிழ் புத்தாண்டு தொடர் விடுமுறை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள், ரயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாளை (10-ம் தேதி), நாளை மறுநாள் (11-ம் தேதி) மற்றும் 12-ம் தேதி (ஞாயிற்றுக் கிழமை) வார விடுமுறை மற்றும் 14-ம் தேதி தமிழ் புத்தாண்டு ஆகிய தொடர் விடுமுறையை முன்னிட்டு, சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன், கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப் பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை 575 பேருந்துகளும், நாளை மறுநாள் 395 பேருந்துகளும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 100 பேருந்துகளும், நாளை மறுநாள் 90 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாதவரத்திலிருந்து நாளை மற்றும் நாளை மறுநாள் மேற்கண்ட ஊர்களுக்கு 24 பேருந்துகளும் மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும், ஞாயிறு மற்றும் செவ்வாய் ஆகிய தினங்களில் சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்கிழமை ஆகிய நாட்களில் 735 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 11,104 பயணிகளும் சனிக்கிழமை அன்று 5,231 பயணிகளும், ஞாயிற்றுக் கிழமை அன்று 6,562 பயணிகளும் மற்றும் ஏப்.14ம் தேதி 5,285 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு ரயில்கள்

விஷு பண்டிகையை முன்னிட்டு, சென்னை - மங்களூரு இடையே சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. தமிழ்ப் புத்தாண்டு, விஷு பண்டிகையை முன்னிட்டு, சென்னையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவனந்தபுரம், கொல்லத்துக்கு சிறப்பு ரயில்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, மேலும் சில சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இதன்படி, மங்களூரு சென்ட்ரலில் இருந்து இன்று (9-ம் தேதி) இரவு 8 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06128), நாளை நண்பகல் 12.30 மணிக்கு சென்னை எழும்பூர் வந்தடையும்.

சென்னை எழும்பூரில் இருந்து நாளை (10-ம் தேதி) பிற்பகல் 2.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06153), மறுநாள் காலை 6.55 மணிக்கு மங்களூரு சென்ட்ரலை வந்தடையும்.

அங்கிருந்து ஏப்.15-ம் தேதி மாலை 4 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06154), மறுநாள் காலை 10.45 மணிக்கு சென்னை எழும்பூர் வந்தடையும். பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூரில் இந்த ரயில்கள் நின்று செல்லும். இதுதவிர, மங்களூரு சந்திப்பு - திருவனந்தபுரம் வடக்கு இடையே சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது. இத்தகவலை தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

## ராமேசுவரம் மீனவர்கள் 10 பேரை சிறைபிடித்து இலங்கை கடற்படை அராஜகம்!



**சென்னை, ஏப்.10:** எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும்இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இதற்கிடையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்த மீனவர்கள் அனைவரும் தனுஷ்கோடி-தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது ரோந்து கப்பலில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதில் இருந்த 10 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்ததுடன், படகையும் பறிமுதல் செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மீனவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடையச் செய்துள்ளது. மேலும் அவர்களை விடுவிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

## வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் சுயேச்சை வேட்பாளர் தீக்குளிக்க முயற்சி - சோழிங்கநல்லூரில் பரபரப்பு

**சோழிங்கநல்லூர், ஏப்.10:** தமிழகத்தில் வருகிற 23-ந்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில், வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள மனுக்கள் ஏற்கப்பட்டு, தகுதி இல்லாத மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. வாபஸ் பெறுவதற்கு இன்று (வியாழக்கிழமை) கடைசி நாள். இன்று மாலை 3 மணி அளவில் இறுதி வேட்பாளர்கள் விவரம் வெளியிடப்பட உள்ளது.

சோழிங்கநல்லூரை அடுத்த மேடவாக்கம் பகுதியை சேர்ந்த ஆட்டோடிரைவரான தனசேகர் என்பவரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தெரிகிறது. இதில் மன உளைச்சலுக்கு ஆளான சுயேச்சைவேட்பாளர் தனசேகர் சோழிங்கநல்லூரில் உள்ள தொகுதி தேர்தல் அலுவலகத்தில் அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இந்த நிலையில் நேற்று தனசேகர் சோழிங்கநல்லூரில் உள்ள தேர்தல் அலுவலகத்துக்கு கையில் பெட்ரோல் கேனுடன் வந்து அலுவலகம் முன்பு உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்து தற்கொலைக்கு முயன்றார். உடனடியாக அங்கு பாதுகாப்பில் இருந்த செம்மஞ்சேரி போலீசார் அவரிடமிருந்த பெட்ரோல் கேனை பறித்து அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முன்னதாக ஆட்டோவில் வந்த தனசேகர் ஆட்டோவின் கண்ணாடியை கையால் உடைத்ததில் கையில் காயமடைந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

இதுகுறித்து தேர்தல் அதிகாரியிடம் கேட்டபோது, "சுயேச்சை வேட்பாளர் தனசேகர் தன்னுடைய முழு விவரத்தையும் மனுவில் பூர்த்தி செய்யவில்லை. போதுமான சாட்சியாளர்கள் பரிந்துரை இல்லை. முறையாக மனுவை பூர்த்தி செய்யாததே வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கு காரணம்" என்று கூறினார்.

## கே.கே.நகரில் அரசியல் பொதுக்கூட்டங்கள் நடத்த எதிர்ப்பு: வழக்கை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்



**சென்னை, ஏப்.10:** சென்னை கே.கே.நகரில் அரசியல் கட்சிகள் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்க எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக,சென்னை கே.கே.நகர் குடியிருப்போர் நலச் சங்க பொதுச் செயலாளரான ரவிசங்கர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "கே.கே.நகர் பகுதியில் குடியிருப்புகள் அதிகம் உள்ளது.

கே.கே.நகர் பகுதியில் அரசியல் கட்சியினர் உரிய அனுமதியின்றி பொதுக்கூட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர், அலுவலகங்களுக்கு செல்வோர், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் இதுபோன்ற பொதுக்கூட்டங்களுக்கு அதிக ஒலி எழுப்பும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவதால் குடியிருப்பாளர்கள் கடும் அவதிக்குள்ளாகி இயல்பு வாழ்க்கைபாதிக்கப்படுகிறது.

எனவே கே.கே.நகர் பகுதியில் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் நடத்த தடை விதிக்க வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இந்த வழக்கு கடந்த 2024-ம் ஆண்டு நடந்த பொதுக்கூட்டத்தை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் எங்கு, எப்போது பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதனால் யாருக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டது என்பது குறித்து எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

## நகை கடை சுவரில் துளையிட்டு 1 கிலோ வெள்ளி, ரூ.1 லட்சம் கொள்ளை: மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு

**திருநெல்வேலி, ஏப்.10:** திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் புதுமனை தெருவைச் சேர்ந்த அலியார் மற்றும் அவரது மகன் முகமது அசனார் ஆகியோர் வீரவநல்லூர் மெயின் பஜார் பகுதியில் நகைக் கடை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் கடையைப் பூட்டிவிட்டு சென்றனர். நேற்று காலை கடையை திறந்தபோது, உள்ளே பொருட்கள் சிதறிக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். கடையின் பின்புறச் சுவரில் பெரிய துளையிடப்பட்டு அதன் வழியாக மர்ம நபர்கள் உள்ளே புகுந்தது தெரியவந்தது.


இதுகுறித்து தகவல் அறிந்து சேரன்மாதேவி டி.எஸ்.பி. அஸ்வத் ஆண்டோ ஆரோக்கியராஜ் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆய்வு நடத்தினர். தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு கைரேகைகள் சேகரிக்கப்பட்டன. மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், கடையிலிருந்த 1கிலோ வெள்ளி பொருட்கள், 1 லட்சம் ரூபாய் ரொக்கப் பணத்தை கொள்ளையர்கள் திருடிச் சென்றது உறுதி செய்யப்பட்டது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு இதே பகுதியில் நகைக் கடை உரிமையாளரிடம் நகை வழிப்பறி செய்யப்பட்ட சம்பவம் நடந்த நிலையில், தற்போது மீண்டும் ஒருதுணிகர கொள்ளை நடந்திருப்பது வணிகர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொள்ளை சம்பவம் நடந்த இடத்தை சுற்றியுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வரும் வீரவநல்லூர் போலீசார், வழக்குப்பதிவு செய்து கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

மக்கள் நடமாட்டம் உள்ள பஜார் பகுதியில் சுவரை துளையிட்டு கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மலைப்பாதையில் கேட்ட பயங்கர சத்தம்: உலா வந்த ஒற்றை யானையால் பொதுமக்கள் அச்சம்



**பழனி, ஏப்.10:** பழனி அருகே மலையடிவாரத்தில் உள்ள அண்ணாநகர், தேக்கந்தோட்டம், புளியமரத்துசெட் பகுதியில் கடந்த சில நாட்களாக ஒற்றையானை வனத்தில் இருந்து வெளியேறி மலைப்பாதையில் உலா வருகிறது. அவ்வாறு வரும்போது சாலையின் நடுவில் நின்று வாகனங்களை மறித்துவிடுகிறது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் அச்சம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில் மலைப்பாதையில் உலாவந்த ஒற்றையானை அண்ணாநகர் பகுதியில் உள்ள ஒரு மளிகைகடையின் கதவை சேதப்படுத்துகிறது. பின்பு சிறிதுநேரம் அங்கேயே நின்று அதன்பிறகு சென்றுவிடுகிறது. இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

எனவே மலைப்பாதையில் உலா வரும் காட்டுயானையை வனப்பகுதிக்குள் விரட்ட வேண்டும். அதற்கான தண்ணீர், இரை வசதியை செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் அவை வனத்தில் இருந்து வருவது தடுக்கப்படும். இதற்கு சம்பந்தப்பட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டுமென இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மதுபோதையில் கால்வாயில் தவறி விழுந்த தொழிலாளி உயிரிழப்பு




**தூத்துக்குடி, ஏப்.10:** தூத்துக்குடி 3-வது மைல் பகுதியில் உள்ள பக்கிள் ஓடை பாலத்தின் கீழ், கழிவுநீர் கால்வாயில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் கிடப்பதாக தென்பாகம் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில்இன்ஸ்பெக்டர் திருமுருகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.

சடலம் சாக்கடைக்குள் சிக்கியிருந்ததால், அதனை மீட்க தூத்துக்குடி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த சிப்காட் நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையிலான தீயணைப்பு வீரர்கள் சடலத்தை வெளியே எடுத்தனர்.

இதனை தொடர்ந்து காவல்துறையினர் நடத்திய முதற்கட்ட விசாரணையில், உயிரிழந்தவர் தூத்துக்குடி ராஜீவ்நகர் 5-வது தெருவை சேர்ந்த செல்வம் (வயது 45) என்பது தெரியவந்தது.

இவர் எப்.சி.ஐ. குடோனில் மூடை தூக்கும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்துள்ளார். நேற்று இரவு வேலை முடிந்த பிறகு, செல்வம் பாலத்தின் மேல் அமர்ந்து மது அருந்தியதாகக் கூறப்படுகிறது. அப்போது போதை அதிகமாகி நிலைதடுமாறிய அவர், எதிர்பாராதவிதமாக அருகில் இருந்த கழிவுநீர் கால்வாய்க்குள் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சம்பவம் குறித்து தென்பாகம் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். செல்வத்தின் உடல் பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த செல்வத்திற்கு விஜயலட்சுமி என்ற மனைவியும், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

இவரது மறைவு அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரிக்க தடை

**மதுரை, ஏப்.10:** திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரிக்க இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.



திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி ஜிஆர்.சுவாமி நாதன் பிறப்பித்த உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில், மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர காவல் ஆணையர், துணை ஆணையர், திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை விசாரித்த தனி நீதிபதி, பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதற்கு எதிராக அரசுத் தரப்பிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பிலும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தன. அப்போது தர்கா தரப்பில் ஆஜரான வழக் கறிஞர் கள் மோகன், வாஞ்சி நாதன் ஆகியோர், தீப வழக்கில் உத்தரவு பிறப்பித்த தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்று மாதிரி தீபத் தூணில் தீபம் ஏற்றியுள்ளார். இந்த வழக்கு தொடர்பான பொருளுடன் தனி நீதிபதி இணைந்து விட்டார்.

எனவே, நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை நீதிபதி விசாரிக்கக் கூடாது என்றனர். பின் னர் நீதிபதிகள், இந்த வழக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு. இதில் அவசரம் காட்ட முடியாது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை அரசியல் மேடையாக மாற்ற வேண்டாம். இது சிறிய பிரச்சினை, ஊதிப் பெரிய பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது.

மேல்முறையீடு மனு மீது இரு நீதிபதிகள் ஏற்கெனவே இறுதி உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதன் பிறகும் தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் உத்தரவை மிகைப்படுத்துவது ஏன், இந்த வழக்கில் யாரும் குரலை உயர்த்தி நீதிமன்றத்தை மிரட்டும் நோக்கத்தில் பேசக் கூடாது என்றனர்.

அப்போது கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் வீராகதிரவன், ரவீந்திரன் ஆகியோர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்க இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகும் தனி நீதிபதி தொடர்ந்து விசாரிக்கிறார்.

டிச.4 உத்தரவுக்குத்தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. முழு அவமதிப்பு நடவடிக்கைக்கும் தடை விதிக்கவில்லை என்று கூறி தனி நீதிபதி விசாரணையை ஏப்.9-க்கு தள்ளி வைத்துள்ளார் என்றனர்.

பின்னர் நீதிபதிகள், தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனின் உத்தரவுக்கு இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகு அவர் விசாரிக்க முடியாது. அந்த வழக்கு தானாக இரு நீதிபதிகள் அமர்வுக்கு வந்துவிடும்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா அல்லது இரு நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டுமா என்பதை விசாரித்து உரிய முடிவெடுப்போம். அதுவரை அவமதிப்பு மனுக்கள் மீது தனி நீதிபதி பிறப்பித்த அனைத்து உத்தரவுகளுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. விசாரணை ஜூன் 4-க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# அரசியல் கார்னர்

## “கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டாலும் மக்கள் என் பக்கம்” - நெல்லையில் விஜய் பேசியது என்ன?

“கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டாலும் மக்கள் என் பக்கம் நிற்கிறார்கள்” என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்தார்.

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 22 சட்டப் பேரவை தொகுதிகளில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை ஆதரித்து நேற்று பாளையங்கோட்டை கேடிசி நகரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் விஜய் பேசியதாவது: திமுக கையில் முழு அதிகாரம் இருந்திருந்தால் கண்டிப்பாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்காது.

ஏதாவது முட்டுக்கட்டை போட்டு நிகழ்ச்சியை நடத்தவிடாமல் செய்திருப்பார்கள். தற்போது அதிகாரமில்லாத முதல்வராக ஸ்டாலின் இருக்கிறார். இதனால் இங்கு சிறப்பாக நிகழ்ச்சியை நடத்த முடிந்துள்ளது. திமுக அரசு நமக்கு எதிராக பிரச்சினைகள், அவதூறுகள் பரப்பினார்கள்.

திமுக, பாஜக கூட்டணி வெளியே தனித்தனியாக இருப்பாங்க. ஆனால், இரண்டு பேரும் ஒன்றுதான். இருவரின் நோக்கமும் ஒன்றுதான். விஜய் வந்துவிடக்கூடாது என்பதுதான் அவர்களது நோக்கமே. நான் வந்ததால் ஊழல் செய்ய முடியாதபடி செய்துவிடுவேன் என்பதால் என்மீது அவர்களுக்கு கடும் ஆத்திரம்.

அவர்கள் அடுத்து ஆட்சிக்கு வரமுடியாத சூழ்நிலையை மக்கள் உருவாக்கிவிட்டனர். அவர்களின் கூட்டணி கணக்கு எடுபடவில்லை. அவர்களின் கல்லாப்பெட்டி கூட்டணி கலகலத்துப் போய் நிற்கிறது. அதை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டணி கட்சியினரே ஒருத்தருக்கு ஒருத்தர் ஓட்டுப் போடமாட்டாங்க போலிருக்கிறது. திமுக-வின் நேரடி கூட்டணிக்கும், மறைமுக கூட்டணிக்கும் நம்மீது கடும் ஆத்திரம்.

அவங்க குடும்பத்திலேயே விசில் சத்தம்பலமாக கேட்கிறதாம். அதனால் இன்னும் ஆத்திரம். சில பல கோடிகளைக் கொடுத்து தனது பையில் காங்கிரஸை ஸ்டாலின் சார் போட்டுக்கொண்டார். ஆனால், உண்மையான காங்கிரஸார் நம்மிடம் உள்ளனர். அவர்களது சிறுபான்மை பாசம் என்ற சாயம் வெளுத்துப் போய்விட்டது.

நான் ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் போனதுக்குப் பின்னரே கட்சியை ஆரம்பித்துள்ளேன். இது அரசியலை தாண்டிய உறவு. அரசியல் ஆதாயம் தேடுவோருக்கு இது புரியாது. மற்றவர்களுக்கு இது எலெக் ஷன். எனக்கு ஒரு எமோஷன். எனக்கு ஒன்று என்றாலும், மக்களுக்கு ஒன்று என்றாலும் மக்களுக்கும் எனக்கும் கண் கலங்கும். கரூர் விஷயத்தில் என் மீது பழிபோட்டாலும் மக்கள் என் பக்கம் நிற்கிறார்கள். இதனால் ஜனநாயகனை முடக்கினர். அதை யார் முடக்கினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதுவும் எடுபடவில்லை.

போலீஸாரை பொம்மையாக வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். நாங்குநேரி சம்பவத்தை ஏன் தடுக்கவில்லை? சட்டவிரோதமாக மணலை, கனிம வளங்களை திருடுகிறார்கள். குடும்பமாக கொள்ளை அடிக்கிறார்கள். ஆட்சி முழுக்க ஊழல் என்று நாறிக்கிடக்கிறது. இந்நிலையில் எந்த முகத்தை வைத்துக் கொண்டு ஓட்டுக் கேட்பீர்கள்.

உங்கள் பணத்தை வைத்து மக்களை விலைக்கு வாங்க முடியாது. இது மாற்றத்துக்கான தேர்தல், மாற்றத்தை கொண்டுவரப்போகும் தேர்தல். இதை உங்களாலேயோ மற்றும் பலராலேயோ தடுக்க முடியாது. வசதியான வாழ்க்கையை தூக்கி எறிந்துவிட்டு, அத்தனை வலிகளையும் தாங்கி வந்துள்ளேன். தமிழகத்தில் திமுக-வுக்கும் தவெக-வுக்கும் தான் போட்டி. இது விசில் புரட்சி தேர்தலாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பொதுக்கூட்டத்துக்குப் பின்னர் தாழையூத்தில் இருந்து வண்ணார்பேட்டை, முருகன்குறிச்சி, சமாதானபுரம் வழியாக கேடிசி நகர் வரையிலும் சுமார் 20 கி.மீ. தூரம் திறந்த வேனில் நின்றபடியே அவர் வாக்குச் சேகரித்தார். வழிநெடுக ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அவரை வரவேற்றனர்.

## குற்றவாளி வீட்டில் பிரியாணி சாப்பிட்ட ‘சார்’ சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார் - பழனிசாமி உறுதி

குற்றவாளி வீட்டில் பிரியாணி சாப்பிட்ட ‘சார்’ அதிமுக ஆட்சியில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார் என்று சென்னையில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கூறினார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி மாவட்ட வாரியாக பிரச்சாரம் செய்து வருகிறார். சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில், தேசிய ஜனநாயக கூட்டணியில் 13 இடங்களில் அதிமுகவும், தலா ஒரு இடத்தில் பாஜக, பாமக, அமமுக ஆகிய கூட்டணி கட்சிகளும் போட்டியிடுகின்றன.

இவர்களை ஆதரித்து வேளச்சேரி தொகுதியில் பழனிசாமி நேற்று பிரச்சாரத்தை தொடங்கினார். அங்கு அவர் பேசியதாவது: வெயில் நேரத்தில் வந்திருக்கிறோம். வருண பகவான் நமக்கு வெயிலைக் குறைத்திருக்கிறார். இயற்கை நமக்கு சாதகமாக இருக்கிறது. இந்த தேர்தலில் திமுக எனும் தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்த 5 ஆண்டுகளில் மக்கள் பட்டது துன்பம், வேதனை மட்டும்தான். அதிமுக ஆட்சி சட்டத்தின் ஆட்சியாக இருந்தது. மக்கள் பாதுகாப்பாக வாழ்ந்தார்கள். எங்கே தவறு நடந்தாலும், அதை தடுத்து, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் அரசாக அதிமுக அரசு இருந்தது.திமுக அரசுக்கு விலை ஏற்றம் பற்றியோ, மக்களை பற்றியோ கவலை இல்லை. எப்போது பார்த்தாலும் ஸ்டாலின் தனது குடும்பத்தைப் பற்றி மட்டும் தான் கவலைப்படுவார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு சீர் கெட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் போதைப் பொருள் விற்பனை, பெரும்பாலும் கஞ்சா விற்பனைக்கு திமுக நிர்வாகிகள் துணை நிற்பதால் அதை கட்டுப்படுத்த முடியவில்லை. திமுக ஆட்சி இருக்கும் வரை கஞ்சா விற்பனையைத் தடுக்க முடியாது.

திமுக ஆட்சியில் கருணாநிதியாக இருந்தாலும், ஸ்டாலினாக இருந்தாலும் குடும்ப ஆட்சி தான். 4 அதிகார மையங்கள். அவர்கள் தமிழகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டு, மக்களுக்கு துன்பத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, ஏழை மக்களுக்கான திட்டங்களை கொடுக்க அதிமுக அரசு அனைத்து தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றித்தரும். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து, சைதாப்பேட்டை மற்றும் விருகம்பாக்கம் தொகுதிகளில் பழனிசாமி பேசுகையில், “ தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை, சிறுமி முதல் பாட்டி வரை பாதுகாப்பில்லை. யார் அந்த சார்? அந்த சார் போய் குற்றவாளி வீட்டில் மூக்குபிடிக்க பிரியாணி சாப்பிட்டார். இப்படி இருந்தால் குற்றச் செயலை எப்படி தடுக்க முடியும்? அதிமுக ஆட்சி அமைந்ததும் யார் அந்த சார்? என்று கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திமுகவில் பாதி பேர் அதிமுகதான். 8 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் திமுகவில் ஆளில்லை. யாரையெல்லாம் கட்சியிலிருந்து நீக்கினோமோ, அவர்கள் அங்கே போய் அடைக்கலமாகி மந்திரியாகிவிட்டனர். செல்லாத ஓட்டுக்கு வேல்யூ உண்டா? நாம் செல்லாத ஓட்டு என்று தூக்கியெறிந்தவர்களை அங்கே தூக்கி வைத்துள்ளனர். இப்போது 19 அதிமுகவினர் திமுகவில் எம்எல்ஏ வேட்பாளர்களாக நிற்கிறார்கள். ஏனென்றால் அங்கே ஆளில்லை. அதனால் அதிமுகவில் ஒதுக்கப்பட்டவர்கள் சீட் வாங்கி நிற்கிறார்கள்” என்றார். மாலையில், தியாகராயநகர்,அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர், பெரம்பூர் தொகுதிகளில் பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார்.

# தூத்துக்குடி வாக்கு எண்ணும் மையத்தில் பொது பார்வையாளர்கள் ஆய்வு

**தூத்துக்குடி, ஏப்.10:** தூத்துக்குடி மாவட்டத்தின் 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையமான வ.உ.சி. அரசு பொறியியல் கல்லூரியில் தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆகியோர் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டனர்.

தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் எலுச்சூரி ரத்னாகர ராவ் (விளாத்திகுளம், தூத்துக்குடி), சோடிங்புயீ (திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம்), அரவிந்த்குமார் வெர்மா (ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி), காவல் பார்வையாளர் ஹிர்மத் சுதிர் ஆகியோர் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும், கலெக்டர் விஷ்ணு மகாஜன் முன்னிலையில் இந்த ஆய்வுகளை மேற்கொண்டனர்.

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. வாக்குப்பதிவு முடிந்தவுடன் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டன்ற தொகுதிகளில் இருந்தும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வாக்காளர் ஒப்புகைச் சீட்டு எந்திரங்கள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் வ.உ.சி. பொறியியல் கல்லூரிக்கு கொண்டு செல்லப்படும்.

இதற்காக கல்லூரியில் எந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் காப்பு அறை, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்கள், முகவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான தனித்தனிப் பாதைகள், ஊடக மையம், குடிநீர் மற்றும் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருவதை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது வாக்கு எண்ணும் மைய ஒருங்கிணைப்பு அலுவலர் சுகுமாறன், தேர்தல் பயிற்சி ஒருங்கிணைப்பு அலுவலர்கள் லொரிட்டா, சிவசுப்பிரமணியன், பொதுப்பணித்துறைச் செயற்பொறியாளர் செல்வி, தேசிய தகவலியல் அலுவலர் சுரேஷ்குமார், வரவேற்பு ஒருங்கிணைப்பு அலுவலர் சாந்தி, தேர்தல் வட்டாட்சியர் தில்லைபாண்டி, தூத்துக்குடி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமணி ஸ்டாலின், வ.உ.சி. அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் பீட்டர் தேவராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர். வாக்கு எண்ணும் மையத்தில் மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு மற்றும் சி.சி.டி.வி. கேமரா கண்காணிப்பு உள்ளிட்ட பாதுகாப்பு பணிகளை தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி உறுதி செய்ய மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தியுள்ளார்.

# ஆலங்குளம் அருகே பனை தொழிலாளியை துப்பாக்கியால் சுட்ட எஸ்ஐ, 2 போலீசார் மீது கொலை முயற்சி உட்பட 4 பிரிவுகளில் வழக்கு

**ஆலங்குளம், ஏப்.10:** ஆலங்குளம் அருகே பனை தொழிலாளியை துப்பாக்கியால் சுட்ட எஸ்ஐ மற்றும் 3 போலீசார் மீது கொலை முயற்சி உள்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. போலீஸ் எஸ்ஐயை கைது செய்யக்கோரி பொதுமக்கள் பேராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே மருதம்புத்தூர் மேலத்தெருவைச் சேர்ந்த பனை ஏறும் தொழிலாளி மணிகண்டன் (36). இவரது தோட்டத்தில் நேற்று முன்தினம் பனைமரங்களில் ‘கள்’ இறக்கி விற்பதாக ஆலங்குளம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.





இதையடுத்து எஸ்ஐ இசக்கிராஜா 2 போலீசாருடன் தோட்டத்திற்கு சென்றுள்ளார். அங்கு மணிகண்டன் இல்லாததால், அவரது வீட்டிற்கு எஸ்ஐ, போலீசார் சென்றனர். அங்கிருந்து மணிகண்டனை அவரது தோட்டத்திற்கு அழைத்து வந்து பனைமரத்தில் கட்டியிருந்த ‘கள்’ பானையை இறக்குமாறு எஸ்ஐ கூறியுள்ளார். இதையறிந்த மணிகண்டனின் அண்ணன் சிவன்பொன்ராஜ், அவரது 17 வயது மகள், 10ம் வகுப்பு படிக்கும் மகன் ஆகியோர் தோட்டத்திற்கு வந்து எஸ்ஐயிடம் வாக்குவாதம் செய்தனர்.

அப்போது தனது குடும்பத்தினருக்காக பேசிய மணிகண்டனுக்கும், எஸ்ஐ இசக்கிராஜாவும் வாக்குவாதம் முற்றி கட்டிப்புரண்டு சண்டை போட்டனர். அப்போது மணிகண்டன், எஸ்ஐ தலையில் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதில் அவர் காயமடைந்தார். இதனால் ஆத்திரமடைந்த அவர் தனது துப்பாக்கியை எடுத்து மணிகண்டனை நோக்கி 4 ரவுண்டு சுட்டதில் 2 தோட்டாக்கள் அவரது காலில் பாய்ந்தது. இதில் மணிகண்டன் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனால், சம்பந்தப்பட்ட போலீசாரை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி மணிகண்டனின் உறவினர்கள் 100க்கும் மேற்பட்டவர்கள் ஆலங்குளம் - முக்கூடல் சாலையில் திரண்டு வந்து காமராஜர் சிலை முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து மணிகண்டன் அண்ணன் மகள் அளித்த புகாரின்பேரில், எஸ்ஐ இசக்கிராஜா மற்றும் போலீசார் மீது பிஎன்எஸ் சட்டம் கொலை முயற்சி 109 (1), 296 (பி), 351 (3) மற்றும் பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் ஆகிய 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர்களை கைது செய்யக்கோரி நேற்று காலை முதல் மாலை வரை மருதம்புத்தூர் கிராமமக்கள் மற்றும் மணிகண்டனின் உறவினர்கள் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் உள்ள தேரடி மாடன் கோயில் வளாகத்தில் உட்கார்ந்து ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இதனால் அந்த கிராமபகுதியில் தொடர்ந்து பதட்டம் நிலவி வருகிறது.

# தூங்கிக் கொண்டே வந்ததால் ஆத்திரம்: ஓடும் லாரியில் இருந்து மாற்று டிரைவரை கீழே தள்ளிவிட்டவர் கைது

**கோயம்புத்தூர், ஏப்.10:** கேரளம் மாநிலம் பாலக்காடு அருகே உள்ள கீழ கேத்திர பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணதாஸ் (50 வயது). மாத்தூர் வெங்கார பரம்பு பகுதியைச் சேர்ந்தவர் மணிகண்டன் (52 வயது). இவர்கள் இருவரும் அங்குள்ள தனியார் லாரி போக்குவரத்து நிறுவனத்தில் டிரைவராக வேலை பார்த்து வருகின்றனர். இருவரும் அடிக்கடி வெளியூர்களுக்கு சரக்கு ஏற்றி கொண்டு லாரியில் செல்வது வழக்கம். வெளியூர்களுக்கு நீண்ட தூரம் பயணிக்கும்போதுகிருஷ்ணதாஸ் தூங்கி விடுவாராம். இதனால் மணிகண்டனே நீண்ட தூரம் லாரியை ஓட்ட வேண்டிய நிலை அடிக்கடி ஏற்பட்டுள்ளது. இது டிரைவர் மணிகண்டனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வந்தது.

இந்த நிலையில் சம்பவத்தன்று இருவரும் லாரியில் கோவையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். லாரியை மணிகண்டன் ஓட்டி வந்துள்ளார். அப்போது சுந்தராபுரம் அருகே லாரி சென்று கொண்டு இருந்தது. லாரியில் இருந்த கிருஷ்ணதாஸ் தூங்கியுள்ளார்.

இதனை பார்த்த மணிகண்டனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. அவர் கிருஷ்ணதாசிடம், லாரியை நானே ஓட்டிக் கொண்டிருக்கிறேன். நீ தூங்கிக் கொண்டு சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொள்கிறாய் என்று கூறி தகராறில் ஈடுபட்டார்.

இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றவே ஆத்திரம் அடைந்த மணிகண்டன், கிருஷ்ணதாசை தாக்கி ஓடும் லாரியிலிருந்து கீழே தள்ளி விட்டதாக தெரிகிறது. இதனால் கிருஷ்ணதாசுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து கிருஷ்ணதாசின் மனைவி சரிதா, சுந்தராபுரம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, லாரி டிரைவர் மணிகண்டனை கைது செய்தனர். பின்னர் அவரை மதுக்கரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM